விலே சதம் 60 ★ பக்கங்கள் — 10

பாவியுங்கள்!
நாள் எலலாம்
நறுமணம் கமழும்
அண்ணு பத்தி
ஜெயந்தி பத்தி
கஜாஞ பத்தி

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1980 -4- 7
PERIODICALS DIVISION
LIBRARY

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

சிக்கன சலவைக்கு
'மில்க்வைற் பார் சோப்'
வாங்கி உபயோகியுங்கள்.
நீலம், வெள்ளே பார் சோப்புக்கள் சிறியதும், பெரியதுமான அளவில் விற்பனையாகின்றது.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

மலர் 22 பங்குனி 24 ஜ அவ்வல் 19 ஞாயிற்றுக்கிழமை (6—4—80) இதழ்

★ வடமாகாணத்தில் மக்கள் வங்கியின் புதிய திட்டங்கள்

# விரைவில் சர்வதேசப் பிரிவு!

## மீனவருக்கு ரூ.3கோடி கடன் புதிய கிளேகள் திறக்கப்படும்

### பிராந்திய முகாமையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் மக்கள் வங்கி சர்வதேசப் பிரிவொன்றை மிக விரைவில் ஆரம்பிக்கவுள்ளது. இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டதும் யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் வங்கி வாடிக்கையாளர்கள் இதுவரை அனுபவித்துவந்த கஷ்டங்கள் நீங்கிவிடும்.**

இத்தகவலே மக்கள் வங்கி வடபிராந்திய முகாமையாளர் திரு. ஈ. நடராசா நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கூறினர்.

கொக்குவிலில் நடைபெற்ற இம்மாநாட்டில் மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலய அதிகாரி திரு. எஸ். அல்விஸ், வடமாகாண பிரசார உத்தியோகத்தர் திரு. எஸ். டி எஸ். செல்லேயா, திரு ஏ. அம்பலவாணர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பிராந்திய முகாமையாளர் திரு. நடராசா மேலும் கூறியதாவது:

"சர்வதேசப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதும், வெளிநாட்டில் வேலே பார்த்துவிட்டு யாழ்ப்பாணத்துக்கு வருபவர்கள் தமது வெளிநாட்டுக் கரன்சிகளே இப்பிரிவின்மூலம் சுலபமாக மாற்றமுடியும்."

"வெளிநாடுகளில் இருந்து எமக்குத்தேவையான பொருட்களே இறக்குமதிசெய்யவும், எமது நாட்டுப் பொருட்களே வெளிநாடுகளுக்கு அனுப்பி அங்கிருந்து அனுப்பப்படும்

[10-ம் பக்கம் பார்க்க]

## "சுதந்திர வர்த்தக வலயத்தின் மூலம் ஏகாதிபத்திய வாதிகளிடம் அரசாங்கம் சரண்!"

### விஞேதன் கூறுகிறுர்

(நெல்லியடி)

"கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில் அந்நிய முதலாளித்துவவாதிகளுக்கு இடமளித்ததன் மூலம், நமது அரசாங்கம் ஏகாதிபத்திய வாதிகளிடம் சரணுகதி அடைந்துள்ளது. அந்நிய ஏகாதிபத்தியவாதிகள் நம் நாட்டுச் செல்வங்களேச் சூறையாடி தத்தம் நாடுகளுக்கு எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டமை இந்நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கும் செயலாகும்."

மேற்கண்டவாறு சோப்பாய்த் தொகுதி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பு வேலேகளுக்குப் பொறுப்பான சட்டத்தரணி திரு. கு. விஞேதன் வளலாய் என்னுமிடத்தில் கிளேயொன்றினே ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருந்தார்.

வளலாய் கலேக்கதி சன சமூக நிலேய முன்றலில் திரு. எம். செல்லத்தம்பி தலேமையில் நடைபெற்ற கிளே அமைப்புக் கூட்டத்தில் திரு. கு. விஞேதன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இந்நாட்டின் அபிவிருத்திக்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியே உண்மையாக செயற்பட்டது. நாட்டின் எதிர்கால நலனே உத்தேசித்து அந்நிய ஏகாதிபத்தியவாதிகளிடம் இந்நாட்டை அடைவு வைக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஒரு போதும் முன் வந்தது கிடையாது. இந்நாட்டு மக்களிடம் நம்பிக்கை கொண்டு, அவர்கள் மூலமே நாட்டினேயும் பொருளாதாரத்தையும் வளர்த்துக் கொள்ள நமது கட்சி நடவடிக்கை எடுக்கும்."

கிளே உத்தியோகத்தர்கள் தெரிவில் தலேவராக திரு எஸ். கே. ரஞ்சன், செயலாளராக திரு. ஸ்ரீகந்தராசா, உப செயலாளராக செ. நவரட்ணம், ஆ. தனிநாயகம், பொருளாளராக திரு. ஞானோக ரஞ்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

**வெங்காய விதை**
இறக்குமதி செய்யப்பட்ட பூசா ரெட்ரக வெங்காய விதைகள் இன்றுமுதல் கிடைக்கும்
உங்கள் தேவைக்கு:
**பிள்ளேயார் மெற்றல் வேக்ஸ்**
107, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 5386

## அமைதி நாடும் கருத்தரங்கு

(வண்ணர்பண்ணே)

மண்டைதீவு மறுமலர்ச்சி மன்றம் நடாத்தும் அமைதி நாடும் கருத்தரங்கு இன்று மாலே கிராமசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடபிராந்திய உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஜெ. ஹெரத், யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். தர்மபாலன், வேலணே உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. குணநாயகம் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள். (கு)

தமிழ் மாணவர்கள்

## பிறமொழி நூல்களேயும் கற்கவேண்டும்

### நூல் கண்காட்சி நிகழ்ச்சியில் யாழ். மேயர் வற்புறுத்து

(யாழ்ப்பாணம்)

உலக நாடுகளில் எமது தமிழ் மாணவர்கள் பிரகாசிப்பதற்கு ஆங்கில அறிவு அவசியமாகும்: ஆங்கில அறிவை ஏட்டுக்கல்வியாகமட்டும் பயன்படுத்தாமல் பிறமொழி அறிஞர்களின் நன்நூல்களே எமது மாணவர்கள் கற்று, அக்கல்வி மூலம் எமது பொருளாதார மேம்பாட்டுக்குப் தமது பங்களிப்பைச்செய்யவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண பொதுநூலக சாம் சபாபதி மண்டபத்தில் பிரித்தானிய மன்றத்தினுல் ஒழுங்குசெய்யப்பட்ட நூற்கண்காட்சியை நேற்றுக் காலே ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ். மாநகரசபை முதல்வர் திரு. இ. விசுவநாதன் குறிப்பிட்டார்.

வைபவத்தில் யாழ் பொது சனநூலகர், திருமதி நடராசா, யாழ். மாநகரசபை உதவி மேயர் திரு சேவியர், நூ வாளர்கள் ச. அம்பிகைபாகன், என் சபாரத்தினம், திருமதி அந்தோனியா சுவாமிநாதன் ஆகியோர் உட்பட பெருந்தொகையான கல்விமான்கள் கலந்துகொண்டனர்.

திரு. விசுவநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில், "இன்றைய கண்காட்சியில் ஆயிரக்கணக்கான நூல்களே பிரித்தானியமன்றம் காட்சிக்கு வைத்துள்ளது, இவைகள் அனேத்தும் எமது இளம் சமுதாயத்தினருக்கு அவசியமானவையாகும். இந்நூல்களே பிரித்தானிய மன்றம் இலவசமாக வழங்குமாயின் நாம் அனேவரும் இக்கண்காட்சியின் பூரண பயனேப் பெறமுடியும் என எண்ணுகிறேன்.

'இக்கண்காட்சியில் கட்டிடக்கலே, குடும்ப நிர்வாகம், பொறியியல், கணக்கியல், உல்லாசத்துறை போன்ற பல்துறை நூல்கள்காட்சிக்குவைக்கப்பட்டிருக்கின்றன. இன்றிலிருந்து ஐந்துதினங்கள் நடைபெறும் இக்கண்காட்சியை எல்லோரும் பூரணமாகப் பயன்படுத்தவேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்' என்றுர். (கெ)

## யாழ். ஆஸ்பத்திரியில் மருத்துவபீடத்திற்கு நான்கு புதிய வார்ட்டுகள்

### எண்ணிக்கை 24 ஆக அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் வார்ட்டுகளின் எண்ணிக்கை 24 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன. முன்னர் 19 வார்ட்டுகளே இங்கு இருந்தன. நோயாளர் நலன் கருதியும், யாழ்ப்பாண பல்கலேக்கழக மருத்துவபீடத்திற்கு, செயல்முறை பயிற்சிக்காக 4 புதிய வார்ட்டுகளுடன் 5 புதிய வார்ட்டுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

புதிய அமைவின் படி முன்னர் இருந்தமுறையில் 1, 2-ம் வார்ட்டுகள் மகப்பேற்று வார்ட்டுகளாக உள்ளன. மற்றைய வார்ட்டுகளின் முன்னேய இலக்கங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. புதிய வார்ட்டுகளின் இலக்கங்கள் வருமாறு:-

3-ம் [illegible] சிரியர் பிரிவு (மகப்பேறு)

4-ம் வார்ட்- தொண்டை, மூக்கு சிகிச்சை

5, 6-ம் வார்ட்டுகள்- ஆண்கள் விபத்துச் சிகிச்சை.

7-ம் வார்ட்டு- மருத்துவப் பேராசிரியர்கள் பிரிவு (சத்திர சிகிச்சை)

8-ம், 9-ம் வார்ட்டுகள்- பெண்கள் சத்திர சிகிச்சை.

10-ம் வார்ட்டு- மூளே நரம்பு சிகிச்சைப்பிரிவு

11-ம் வார்ட்டு- பெண்கள் கண் சிகிச்சை

12-ம் வார்ட்டு- சத்திர சிகிச்சை மகப்பேற்றுப் பகுதி.

14-ம் வார்ட்டு- பெண்கள் முறிவு நெறிவு - உள்ளுறுப்பு சிகிச்சை.

15-ம் வார்ட்டு - ஆண்கள் முறிவு நெறிவு - உள்ளுறுப்பு சிகிச்சை.

16-ம் வார்ட்டு- ஆண்கள் கண் சிகிச்சை.

17-ம், 18-ம் வார்ட்டு- பெண்கள் நல சிகிச்சை.

19-ம், 20-ம் வார்ட்டுகள்- ஆண்கள் நல சிகிச்சை.

21-ம் வார்ட்டு- மருத்துவபீடச் செயல் முறை

22-ம் வார்ட்டு - தோல் சிகிச்சைப் பிரிவு

24-ம் வார்ட்டு - குழந்தைகள் சிகிச்சைப்பிரிவு.

25-ம் வார்ட்டு- மருத்துவ பேராசிரியர் செயல்முறை பயிற்சிப் பிரிவு.

26-ம் வார்ட்டு- வயிற்றேட்டச் சிகிச்சைப்பிரிவு

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மருத்துவபீடத்திற்கான வார்ட்டுகள் தற்போது மூடப்பட்டிருக்கின்றன. இன்னும் இரு மாதத்தில் இவ் வார்ட்டுகள் இயங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. (லக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றுச்சாக்கு கொள்வனவுக்கு கேள்விகள்

கீழ்க்காணும் வெற்றுச்சாக்குகள் கொள்வனவு செய்வதற்கு விற்பனை அபிவிருத்தித் திணைக்கள வடபிராந்திய உதவி ஆணையாளரால் கேள்விகள் கோரப்படுகின்றன. வெற்றுச்சாக்குகள் விற்பனைக்கு வைத்திருப்போர் 14-4-80 காலை 10-00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக தங்கள் கேள்விகளை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ பதிவுத் தபாலிலோ அனுப்புதல்வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாங்கள் கொடுக்க உள்ள வெற்றுச்சாக்கின் மாதிரி, ஒவ்வொரு இனத்திலும் இவ்விரண்டு 10-4-80-க்கு முன்னதாகவே எமக்கனுப்பிப் பின் பெற்றுக்கொள்ளவேண்டும்.

### வெற்றுச்சாக்கு விபரமும் தொகையும்

| | | |
|---|---|---|
| 1. | கயித்துச் சாக்கு புது | 1000 |
| 2. | மாச்சாக்கு மெல்லியது, கிழிவற்றது | 1000 |
| 3. | அரிசிச் சாக்கு பெரிது, அல்லது மாச்சாக்கு கிழிவற்றது | 1000 |

பதிவுத் தபாலில் விண்ணப்பம் அனுப்புவோர்கள் இடது பக்க மூலையில் வெற்றுச் சாக்கு கேள்விகள் எனக் குறிப்பிடவும்.

(ஒப்பம்)
ச. பொ. பாலசிங்கம்
உதவி ஆணையாளர், வடபிராந்தியம்

விற்பனை அபிவிருத்தித் திணைக்களம்,
வடபிராந்தியம்,
250, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 5402

### விற்பனைக்கு

7-4-80 திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் சகாய விற்பனையுடன் அன்பளிப்பும் வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு எமது விளம்பர விற்பனை வாகனத்தில் கொடுத்து பெறுமதி வாய்ந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். 5331

உன்னத நிலையிலுள்ள 9 ஸ்ரீ தொடர்பிலக்கமுடைய CB125 Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: B. சபாநாதன், 14, மணல்தறை லேன், கந்தர்மடம். 5362

Brownson
வாங்குங்கள் பிரவுண்சன் அரறூட்-மா
பிரவுண்சன் அரறூட மா அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சிறிது பாவித்த Ailse Graig ரோலபோட் இங்கிலாந்து டீசல் என்ஜின் இரண்டுடன் விற்பனைக்குண்டு [illegible] தொடர்பு கொள்ளவும் [illegible] 34/3, கலைகபுரம், கிளிநொச்சி 5360

சாப்பாட்டுக்கடைத் தளபாடங்கள் யாவும் விற்பனைக்குண்டு. நேரில் [illegible] மூலமோ [illegible] கொள்ளவும். வெ. யோகீஸ்வரன், தொலைபேசி: 229, வட்டுக்கோட்டை 5378

நாரந்தனை தெற்கு உப தபால் கந்தோருக்கு அண்மையில் ஊர்காவற்றுறை - வேலணை பிரதான வீதியில் வீடும் வளவும் அத்துடன் நெற்காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் சிங்கராயர் 24, தேவாலய வீதி, யாழ்ப்பாணம். 5407

தம்பு தோட்டம், சச்சாய் தென்னம் ஓலை: வாங்க விரும்புவோர் விலை விபரங்களை ஏப்ரல் 28-ம் திகதிக்கு முன், சாவகச்சேரி தபாற் கந்தோர் றோட்டு, திருமதி S. P. ஏபிரகாமிடம் சமர்ப்பிக்கவும். 5389

### விற்பனைக்கு

அசோக் லேலண்ட் லொறி 26 ஸ்ரீ 3000 தொடர் இலக்கம் கொண்டது. நல்ல நிலையில் உடன் விற்பனைக்குண்டு. பிறென்ஸ் வசதி செய்து கொடுக்கப்படும் தொடர்பு கொள்ளவும்: வி. தணிகாசலம் 178, கஸ்டம்ஸ் வீதி, திருகோணமலை. 5405

HONDA C D 125 - 80 ஸ்ரீ தொடர்பிலக்கம் விற்பனைக்கு உண்டு. கிழமை நாட்களில் 9 - 12 மணி வரையிலும், சனி - ஞாயிறு தினங்களில் 2 - 6 வரையிலும் பார்வையிடலாம். 13, வெள்ளார் தெரு, யாழ்ப்பாணம். 5400

புத்தம் புதிய Baby Belling Eelectric Cooker Oven னும் Kelminator 3 Star Automatic Refregrirator ம் விற்பனைக்கு உண்டு. சரவணமுத்து 34, நாலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 5401

### தேவை

பெண் தையல் தொழிலாளிகள் தேவை. நவீன உடைகள் வெட்டித்தைக்கத் தெரிந்தவர்களாய்இருக்கவேண்டும். நேரில் வரவும். க. பொன்னுத்துரை. பி. எம். ரெய்லேர்ஸ், 399-401, மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். 5396

மன்னாரில் தேநீர்க்கடை ஒன்றில் சமையல் வேலை செய்வதற்கும், சப்பிளைசெய்வதற்கும் ஆட்கள் தேவை. வயதெல்லை கிடையாது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். நேரில் வரவும். 'கந்தவிலாஸ்', பெரியகடை, மன்னார். 5388

பட்டி வேர் தென்கயாக கொள்முதல் செய்[illegible] நல்ல விலை தரலாம் P. M. நாகரட்ணம் [illegible] 15/17, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 5398

பிடவை வியாபாரம் செய்யக்கூடிய டெண்பிள்ளைகள் தேவை நேரில் வரவும். த. சங்கரப்பிள்ளை, 21, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 5408

கண்ணாடித் தொழிற்சாலையில் வேலை பழகுவதற்கு 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் உடனே தேவை. நாளொன்றிற்கு 8 ரூபா 50 சதம் கொடுக்கப்படும். நேரில் வரவும். சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 5399

### வகுப்புகள்

PMG's Certificate Exam Oct. 1980 பயிற்சி வகுப்புகள் 3-4-80 ஆரம்பமாகி நடைபெறுகின்றன. செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை மாலை 5-30. Bond Institute, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5395

### பிரசித்த ஏலவிற்பனை

செவலட், பெட்போட், பேக்கன்ஸி, லொறிகளின் செசிகள், என்ஜின்கள் உப உறுப்புக்கள், வில்லியர்ஸ் ஜீப் உப உறுப்புக்கள், விஸ்டர் பேக்கன்ஸி, போர்ட் என்ஜின்கள், 30 HP முதல் 120 HP வரை என்ஜின் உபஉறுப்புக்கள் முதலியன திருகோணமலை உவர்மலை வீதி 206 ஆம் இலக்கக் கட்டிடத்தில் வைத்து 27-4-80 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் ஏலத்தில் விற்கப்படும். வாங்குபவர்கள் உடன் பணம் செலுத்திப் பொருட்களைக் கொண்டுசெல்லலாம். வி. தணிகாசலம், 178, கஸ்டம்ஸ் வீதி, திருகோணமலை. 5403


# டியுறேல் அப்பிள் பழச்சுவையுள்ள, இரும்புச்சத்து நிறைந்த, பிள்ளைகளுக்கான விற்றமின் பாணி.






பூச்சிக் கோளாறு, உங்கள் பிள்ளைகளுக்குப் பெரும் சோகையை உண்டாக்கி கடும் பலவீனத்தை ஏற்படுத்தி சக்தியை இழக்கச் செய்கிறது.

இரும்புச் சத்தும், பி கொம்பிளெக்சும் கொண்ட பிள்ளைகளுக்கான டியுறேல், இரத்த விருத்தியை அதிகரிக்கச் செய்து, போஷாக்குக் குறைவு, பலவீனம் ஆகியவற்றை எதிர்க்கிறது.

பிள்ளைகளுக்கான டியுறேல் பாணி மதுசாரமற்றது. அத்துடன் உங்கள் பிள்ளைகள் பெரிதும் விரும்பும் அப்பிள் பழச் சுவையுடையது.


உங்களது பிள்ளை களைப்புற்று, சோர்வடைந்திருக்கும் போது மீண்டும் பெருகூட்டி சுறுசுறுப்பாக சக்தி பெறவும், விற்றமின்களும் கொண்ட பிள்ளைகளுக்கேற்ற டியுறேல் கொடுங்கள், அதுவே பலவீனத்தைப் பறக்கச் செய்கிறது....
அதுவே பலம் வழங்குகிறது.

ஒவ்வொரு கரண்டி பிள்ளைகளுக்கான டியுறேலிலும் இரும்புச்சத்து நிரம்பியிருக்கிறது.

சில்லறை விலை [illegible] 13/75

Grant K & E 3254


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலவுகாத்த கிளி

ச. முருகானந்தன்

அவன் மணியைப் பார்த்தான். 8-10 இன்னும் இருபது நிமிடங்களில் எம் பீ யின் கட்சி அலுவலகத்திற்குப் போகிறது என்பது முடிகிற காரியமா? அதுவும் காலை நேரத்தில் பஸ்நிலையத்தில் நல்ல கூட்டம் இருக்குமே.

அவன் பஸ்நிலையத்திற்குப் போனபோது அவனுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. கூட்டம் அதிகமில்லை ஒருவேளை இப்போதுதான் பஸ் வந்து போயிருக்கும்...'ம்... இந்த ஊக்கபோனஸ் முறை வந்த பின்னர் கொண்டக்டர்கள் எல்லோரையுமே ஏற்றிக் கொண்டு செல்கிறார்கள். ஆனால் பஸ்ஸிற்குள்ளேதான் நெருக்கடி இந்த நெருக்கத்துள் சில 'எல்லுப்போல' சுகங்களும் இல்லாமல் இல்லை'- அவன் சிரித்துக்கொண்டான்.

அவன் அதிகநேரம் காத்திருக்கவில்லை-பஸ் வந்ததும்; அதுவும் அதிக பிரயாணிகள் இல்லாமல் வந்தது இது அவனுக்குச் சிறிது ஏமாற்றமாக்கூட இருந்தது என்று சொல்ல வேண்டும்.

கொண்டக்டர் சிரித்தமுகத்துடன் 'ரிக்கெற்' போட்டார். எவ்வளவு அதிசயமானகாட்சி! சிரித்தமுகத்துடன் கொண்டக்டர்களைத் தரிசிப்பது என்பது எவ்வளவுசுமாரான அனுபவம்!

பஸ் வேகமாகப் போய்க்கொண்டிருந்தது 'இந்த வேலைக்காவது எம். பீ என்னைச் சிபார்சு செய்வாரோ?... கடவுளே...' என அவனது மனது என்றுமே அவனால் நம்பப்படாத கடவுளை நாடியது நேற்றிரவு படுக்கையிலும் இதையே சிந்தித்துக்கொண்டிருந்தான். நள்ளிரவுக்குப் பின்னர்தான் அவனுக்கு உறக்கம் ஏற்பட்டது. மீண்டும் இருள் விலகாத அதிகாலையிலேயே உறக்கம் கலைந்துவிட்டது. கண் விழித்தபோதே இன்று எம். பீ. வீட்டுக்குப் போக வேண்டும் என்ற எண்ணம் மனதில் நின்றது கூடவே இம்முறையும் வீணே அலைச்சல்தானோ என்று அவன் சந்தேகப்படவும் ஆரம்பித்தான். உண்மைதானே எத்தனை தடவைகள் எம். பீ. அவனுக்கு உறுதியளித்திருக்கிறார். ஆனால்...

அவன் படுக்கையைவிட்டு எழும்பு முன்னரே, 'மேனை எழும்பன்... இண்டைக்கு எம். பீ. வீட்டுக்குப் போக வேணுமெல்லே...' என்று அம்மா திருப்பள்ளி எழுச்சி பாடத்தொடங்கிவிட்டார். ஏனோ அப்போது அவனுக்குக் கோபம் பிட்டுக்கொண்டுவந்ததால் அம்மாவிடம் எரிந்து விழுந்துவிட்டான். 'சும்மா இரன். இப்ப ஏன் விடியமுந்தி அரியண்டப்படுத்துகிறாய்?'... அவன் எரிந்து விழுந்ததும் அம்மா குசினிக்குள் போய் விட்டாள். அம்மா மீது அனாவசியமாகச் சீறிவிழுந்துவிட்டதை அப்பொழுது உணர்ந்தான்.

முன்னர் எல்லாம் அவன் இப்படியில்லை. ரொம்பச்சாதுவானவன். இருபத்தியெட்டு வயது வந்தபின்னரும் தனது சொந்தக்கால்களில்நிற்கமுடியவில்லையே—ஒரு வேலை பெற்றுக்கொள்ளமுடியவில்லையே என்ற விரக்தி மனதினடியில் மண்டிக்கிடந்து சில நேரங்களில் அவன் மீது அன்பு செலுத்துகிறவர்கள் மீது அனாவசியக் கோபமாக வெடித்துவிடுகிறது. இந்தக் கோபம் எல்லாம் கட்டுப்படுத்தப்பட வேண்டியவை என்று சாதாரணமாக இருக்கும் நேரங்களில் நினைத்துக்கொள்வான். சமயங்களில் முடிவதில்லை

அம்மா அடுப்படியிலிருந்து மீண்டும் குரல்கொடுத்தாள்.

'தேத்தண்ணி ஆறப்போகுது மேனை...' மனம் குழம்பிப் போயிருந்த நேரத்தில் அம்மாவின் வார்த்தைகள் அவனை நெகிழச் செய்தது.

எழுந்து வாசலுக்கு வந்தபோது அந்தக் காலைப்பொழுது மிகவும் அழகாக இருந்தது. வாசற்படியில் நின்று பார்க்கின்றபோதெல்லாமே எளிர்ச்சியாக இருந்தது. வீட்டு வாசலில் கொட்டிப்போயிருந்த மல்லிகைப்பூவின் மணம் இளம் தென்றல் காற்றுடன் வந்த ஒரு இன்பப் பிரவாகத்தை ஏற்படுத்தியது. ஏனோ மல்லிகாவை நினைத்துக்கொண்டான் அவளும் இன்னும் எவ்வளவு காலம்தான் அவனுக்காகக்காத்திருப்பாள்...?

'ம்...எனக்கு ஒரு வேலை கிடைத்தால்...' மனதில் தோன்றிய மகிழ்ச்சி எல்லாம் மறுகணமே குலைந்தன. 'கலியாண வயதில் மூன்று தங்கைகள்...இவர்களது காரியங்களைப் பார்க்காமல் நான்...' அவன் நெடுமூச்செறிந்தான்.

'அப்பா அடிக்கடி சொல்வார், 'பெரியவனுக்கு ஒரு வேலைகிடைச்சிட்டால் என்ரை பாடு அசைவில்லை...' அப்பொழுதெல்லாம் அவனுக்குச் சிரிப்புத்தான் வரும். அவன் மனதில் நினைப்பான். அது அந்தக்காலம்...ஆனால் இன்றோ அது பொருந்தாது...ம்...ஏதோ என்னை நம்பிட் பிள்ளையைப் பெத்தவைமாதிரி...' நினைத்தபடியே தனக்குள் சிரிப்பான்...

இந்த மண்ணிலே தமிழ் இளைஞர்களாகப் பிறந்துவிட்டவர்கள் வேலை தேடிப்பெருமூச்சுவிடுவது, சீதனக் கொடுமையினால் கலியாணம்செய்ய வழியின்றி பெண்கள் விடும் பெருமூச்சுக்கு ஒப்பான ஒரு சாபக்கேடுதான். இது அவனது சொந்த அனுபவம்.

'நடுவிலை இடமிருக்கு...முன்னுக்குப் போங்க...' கொண்டக்டர் குரல் கொடுத்தார்—அவன் ஆசனத்தில் அமர்ந்திருந்தபடியே திரும்பி நோட்டமிட்டான். இப்போது பஸ்ஸினுள் நல்ல கூட்டம். அவனது ஆசனத்துக்கு அருகே ஓர் இளம்பெண்—அவனிலும் பார்க்க வயது குறைந்தவளாகத்தான் இருக்கும்—தோளில் தூங்கவிட்ட பையுடன் ஸ்டைலாக நின்றிருந்தாள். அவள் ஏதோ ஒரு அலுவலகத்தில் உத்தியோகம் பார்க்கிறவளாக இருக்கவேண்டும். எழுந்து அவளுக்கு இடம் கொடுக்கவேண்டும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. 'எல்லாவற்றிலும் சமத்துவம் கேட்கிறவர்கள், அப்புறம் 'பெண்களுக்கு மட்டும்' என்றதெல்லாம் எதற்கு?'—அவன் குரோதமாக எண்ணினான். 'இதுகள் எல்லாம் வேலைக்கு எண்டு வெளிக்கிட்டுத்தானே பொடியங்கள் எல்லாம் நடுத்தெருவிலை...'

து இன்னும் ஐந்து நிமிடத்தில் எம். பி.யின் வீட்டிற்குச் சென்றுவிடலாம். அவன் கடிகாரத்தைப் பார்த்தான். 8-25. பரவாயில்லை.

அவன் 'அட்வான்ஸ் லெவல்' பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்தும்கூட, தரப்படுத்தலால் தரைப்படுத்தப்பட்டு, பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமல் போன பின்னர் அவனுக்கு எல்லாமே சூனியமாக இருந்தது. அப்பா அடிக்கடி சொல்வார் 'இவனுக்காக ரியூட்டரிக்குக் குடுத்த காசு இரண்டு பெட்டையளுக்குச் சீதனம் கொடுக்கக் காணும்...' உண்மைதான். ஆனால் அவனுக்கு பட்டுமா...?

கடந்த எட்டு வருடங்களாக அவனது வேலை, வேலை தேடுவதாகவே இருந்தது. பலன் பூஜ்யம்தான். இடையில் சில நாட்கள் ஒரு கடையில் வேலைசெய்தான் ஆனால் நூறு ரூபா சம்பளத்துக்காக தனது சுதந்திரத்தைப் பறிக்கும் முதலாளியின் கீழ் அவனால் வேலை செய்யமுடியவில்லை சிலகாலம் ரியூசன் கொடுத்தான், படித்த மாணவர்கள் ஒழுங்காகக் காசு கொடுக்காததால் அதையும் கைவிட்டான். ஆனால இவற்றையெல்லாம்விட அண்மையில் அவன் ஒரு பெரிய ஏமாற்றத்திற்கு உள்ளானான். எல்லோரும் அரபுநாடுகளுக்குப் போகிறார்களே என்று அவனும் ஆசைப்பட, அப்பா கடன்பட்டு மூவாயிரம்கொடுத்தார் ஆனால அந்தப் போலி ஏஜென்ட்டா பணத்தை ஏப்பம் விட்டுவிட்டுத் தலைமறைவாகிவிட்டான். யாரை நோவது?

அவனோடு படித்தவர்களில் ஒரு சிலருக்குத்தான் உத்தியோகம் கிடைத்தது. அதுவும் அனைவுக்கும் லஞ்சத்திற்கும்தான் கிடைத்தது. நேர்மையாகத் தராதரத்துடன் வேலை வங்கிப்படிவம்பெற்ற அவனைப் போன்ற பலருக்கு ஏமாற்றம்தான் இன்றுவரை! லஞ்சம் கொடுத்தால் சரிவரும் என்று யாரோ சொல்ல, அவனது அப்பா எம். பி.க்கு லஞ்சம் கொடுக்கப்போக, எம். பி. சீறி விழ...முடிந்த கதைகள். 'நேரே குடுக்கிறதே... குடுக்கிற மாதிரி எல்லே குடுக்க வேணும்...' யாரோ புத்தி சொன்னார்கள். தாமதமான அறிவுரை!

வானொலியிலும், பத்திரிகையிலும் பல லட்சம் பேர்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளதாக அறிக்கைகள் வெளியாகின. ஆனால் அவனது கிராமத்தில்...?

அண்மையில் பாமசிஸ்ட் பயிற்சிக்கு ஆட்களை எடுப்பதாக அறிந்ததும் அவனும் முயற்சிசெய்ய ஆரம்பித்தான். உயர்தர வகுப்பில் நாலு திறமைச் சித்தியுள்ள அவனுக்குக் கட்டாயம் கிடைக்கவேண்டும். ஆனால் பதவி வைத்தியர்களை எடுத்தபோது அவனிலும் பார்க்கக் குறைவான சித்திகளைப் பெற்ற எம். பி. யின் காரியதரிசியின் மகளுக்குத்தானே கிடைத்தது. அதனால் இம்முறை ஆரம்பத்திலிருந்தே எல்லோரையும் முறைப்படி கவனித்தான். எம். பி.யும் அவனையே சிபார்சுசெய்வதாக வாக்களித்திருந்தார். இன்று காலை 8-30க்கு தன்னை வந்து சந்திக்கும்படி கூறியிருந்தார். அதற்காகத்தான் இப்பொழுது போய்க்கொண்டிருக்கிறான்.

எம். பீ. வீடு வந்துவிட்டது.

அவன் அங்கே சென்றபோது வழமைபோல் கூட்டத்திற்குக் குறைவில்லை. எம் பீ. இன்னமும் வரவில்லை. எல்லோரும் அவரது வரவுக்காகக் காத்திருந்தனர்.

அவன் அருவியாய் முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு வாங்கிலில்போய் உட்கார்ந்தான்.

சில நிமிடங்களுக்கெல்லாம் எம்- பீ. வந்துவிட்டார். தேர் போன்ற கார். மக்களுக்குச் சேவைசெய்வதற்காக அரசாங்கக்கணக்கில் பெற்றோல் காப் கூப்பி புன்னகைத்தபடியே அறைக்குள் சென்றார்

(7ம் பக்கம் பார்க்க)

மாறுத உண்மையை அடிப்படையாகக் கொண்டது

# ஹோமியோபதி வைத்திய முறையின் தத்துவம்!

ஹோமியோபதி வைத்தியத்தின் தந்தை டாக்டர்சாமுவேல் ஹனிமானின் 225-வது நினைவு தினம் இம்மாதம் 10-ம் திகதியாகும்.

டாக்டர் சாமுவேல் ஹனிமான் அவர்கள் ஆங்கில வைத்தியத்தில் பட்டம் பெற்று புதிய சிகிச்சை முறையைக் கண்டுபிடித்து ஹோமியோபதி என்று பெயர்சூட்டி வளர்த்தார். இன்று அவருடைய வைத்திய சாஸ்திரம் மிகவும் புகழ்பெற்று உலகெங்கும் அங்கிகரிக்கப்பட்டு உன்னத நிலையை வகிக்கிறது. அவரது 225-வது நினைவுதினம் இன்றாகும்.

ஆண்டவன் மனிதனை ஆரோக்கியமாகவே படைத்தார். அவன் தன் தீய எண்ணங்களாலும் தீய நடத்தைகளாலும் வியாதிகளை வருவித்துக்கொண்டான். இவ்வியாதிகளை நீக்க பற்பல தேசங்களிலும் பற்பல அறிவாளிகள் வைத்தியமுறைகளை வகுத்தனர். பழையகால வைத்தியமுறைகளாகிய ஆயுர்வேதமும், சித்தமும், முகமதியர்களின் யூனானி வைத்தியமும் அலோபதி என்று அழைக்கப்படும் மேல் நாட்டு வைத்திய முறையும் தோன்றி பிற்காலத்தில் பலரின் அபிப்பிராயங்களுக்கு உட்பட்டுப் பல மாறுதல்களை அடைந்து இன்றும் நம்மிடையே இருந்துவருகின்றன.

உலகிலே பல சாஸ்திரங்கள் இருக்கின்றன. அவைகளில் வைத்திய சாஸ்திரம் ஒன்றில்தான் குருட்டு நம்பிக்கைகளும் கற்பனைகளும்மலிந்து இருக்கின்றன. மனிதனுக்கு இவ்வுலகிலே உள்ள எல்லாவற்றிலும் அருமையான விலை மதிப்பிடமுடியாத உயிர் என்னும் பொருளைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்கும் வைத்திய சாஸ்திரம் உண்மையை அடிப்படையாகக் கொள்ளவேண்டும்.

ஹோமியோபதி வைத்திய முறையை உலகிற்கு அறிமுகம் செய்த டாக்டர் ஹனிமான் 'அவர் சொன்னார், இவர் சொன்னார் என்பதற்காக ஒன்



எம். சிவராசா

றையும் நம்பி ஏற்றுக்கொள்ளாதே. ஒவ்வொன்றையும் தீர ஆலோசித்து நீயே நீதிபதியாக இருந்து முடிவுசெய்' என்ற தனது தந்தையின் உபதேசத்தை தாரகமந்திரமாகக் கொண்டு வியாதிக்கு மருந்து கண்டுபிடித்தார்.

டாக்டர் ஹனிமான் ஒவ்வொரு வியாதிக்கும் ஏனைய வைத்திய முறைகளில் எவ்வாறு மருந்து நிர்ணயிக்கப்பட்டது என்பதை முதலில் ஆராய்ந்தவிடத்து சுரத்துக்குச் சுக்கைக் கொடுக்கலாமென்று யோசித்து சுரமுள்ள சில நோயாளிகளுக்கு சுக்கை ஒரு டாக்டர் கொடுப்பார். அதனால் பெரும்பாலோரின் சுரம் நீங்கிவிட்டால் அந்த டாக்டர் சுரத்துக்கு சுக்குதான் மருந்து என்று விளம்பரப்படுத்துவார். சில காலம் கழித்து வேறொருவர் மிளகை மேற்கண்ட விதம் கொடுத்து அதேபோல பலனையும் கண்டுவிட்டால் சுரத்திற்கு சுக்குதான் மருந்து என்பது போய் எல்லோரும் சுரத்திற்கு மிளகுதான் மருந்து என்று மிளகின் மகிமையைப் பாட ஆரம்பிப்பார்கள். இக்காரணங்களில் இருந்து வியாதிக்கு மருந்து கொடுப்பது வைத்தியர்களின் அபிப்பிராயங்களை ஒட்டியதாகவே இருந்துவந்ததென்பதை ஹனிமான் கண்டுபிடித்தார்.

மனிதர்களின் அபிப்பிராயம் அடிக்கடி மாறக்கூடியவையாதலால் என்றைக்கும் மாறுத ஓர் உண்மையை அடிப்படையாக வைத்துச் செய்யப்படும் சிகிச்சையே உண்மை வைத்தியமாகும் என்ற முடிவுக்கு டாக்டர் ஹனிமான் வந்தார். இக்கோட்பாட்டிற்கு அமைவதே ஹோமியோபதி வைத்திய சாஸ்திரம்.

ஹோமியோபதி வைத்திய முறையில் எவ்வாறு ஒரு வியாதிக்கு மருந்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை ஹனிமானின் ஆராய்ச்சியில் ஓர் உதாரணத்தை சற்றுக் கவனிப்போம்.

குளிருடன் வரும் முறைச் சுரத்திற்கு 'கொயினை' நல்ல மருந்து என்று ஆங்கில வைத்தியம் கூறுகின்றது. டாக்டர் ஹனிமான் அவர்கள் கொயினை எப்படி சுரத்தைப் போக்குகிறது என்பதை ஆராய்ந்தார். ஒரு நாள் தானே கொயினை வைச் சாப்பிட்டுப் பார்த்தார். ஒன்றிரண்டு நாட்களில் அவருக்கு குளிர் நடுக்கத்துடன் சுரம் ஏற்பட்டது.

அச்சுரம் கொயினை சாப்பிட்டதினால்தான் ஏற்பட்டதா அல்லது சாதாரணமாகத் தோன்றியதா என்ற சந்தேகத்தினால் அவர் தன் நண்பர்கள் சிலருக்கு இதேபோல் கொயினைவைக் கொடுத்து அவர்களுக்கும் சுரம் ஏற்பட்ட பிறகே கொயினைவை நிறைய உட்கொண்டால் குளிர்முறைச் சுரம் ஏற்படுமென்பதை நம்பினார். இவ்விதமாகப் பல மருந்துகளைக்கொண்டு பல வருடங்கள் ஆராய்ச்சிசெய்த பின்னரே ஹனிமான் அவர்கள் பின்வரும் உண்மையை வெளியிட்டார்கள்.

ஒவ்வொரு மருந்தும் மனித உடலில் ஒவ்வொரு விதமான வியாதிக்குறிகளை உண்டக்குகிறது. மருந்தின் பறம்அதிகமாய் இருந்தால் அதனால் உண்டாக்கப்படும் வியாதிக்குறிகளும் கடுமையாய் இருக்கின்றன நாட்பட்ட வியாதிகள் திடீரெனத்தோன்றும் மற்றொரு வியாதியினால் குணம் செய்யபடுகிறது என்பது சில சமயங்களில் இயற்கையாய் ஏற்படுகிறது அதாவது ஒருவியாதியில் தென்படும் குறிகளைப் போன்ற குறிகளை உண்டாக்கும் வல்லமையுள்ள மருந்தை உபயோகிக்கவேண்டும். அதனால் வியாதி நீங்கும். இதுவே ஹோமியோபதி வைத்திய முறையின் தத்துவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் பெருக்கப்பிரச்னைகளைத் தீர்க்க

# குடாநாட்டு மக்கள் இடம்பெயர்ந்து வாழ முன்வர வேண்டும்

இயற்கைக்கு மீறிய ஒரு அதிகரிப்பு நிலைமை ஏற்படும் போது அங்கு வெடிப்பு ஒன்று ஏற்படுகிறது. அவ்வாறே யாழ்ப்பாணக்குடாநாட்டிலும் நிலப்பரப்பின் அளவு, கொண்டுள்ள வளங்கள், நுகர்வின் தன்மைகள், மக்கட்செறிவு என்பன ஒன்றிற்கு ஒன்று முரண்பட்டு அமைவதால் அங்கு ஒரு வெடிப்பு நிலைமை உருவாகியுள்ளமையை அவதானிக்கலாம்.

மக்கட் பெருக்கமானது அளவுக்கு மீறிய ஒரு சூழ்நிலையில் அவர்களின் தேவைகளும அபரிமிதமாகின்றன. இந்நிலைமையை சமாளிக்கமுடியாத இன்னல் எதிர்பார்க்கபட்டுவதை பொதுவாக வெடிப்பு நிலைமை என புவியியலறிஞர்கள் சொற்பதம்கொள்கிறார்கள்.

யாழ்ப்பாண மாவட்டம் சுமார் 998.6 ச. மைல் பரப்பளவைக் கொண்டது, இவற்றுள் 34.1 ச. மைல் தீர்ப்பகுதிகளுள் அடங்க ஏனையவையே நிலப்பகுதிகளாகும். இவற்றுள்ளும் மக்கள் வாழாப் பகுதிகளாக மணல்மேடுகளும் சதுப்பு நிலங்களும்புதர்காடுகளும் காணப்படுகின்றன.

மொத்தமாக யாழ். மாவட்டத்துள் பதினாறு உதவி அரசாங்க பிரிவுகள் அடங்குகின்றன. இவற்றுள் மூன்று பிரிவுகள் தீவுப்பகுதிகளை உள்ளடக்கியும், மூன்று பிரிவுகள் யாழ். குடாநாட்டுக்கு வெளியேயும் அமைந்துள்ளதை அவதானிக்கலாம். எனவே யாழ்ப்பாணக் குடாநாடு என்னும்போது பத்து உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய நிலப்பகுதிகளையே கருத்தில் கொள்ளவேண்டும். இந் நிலப்பகுதியானது சுமார் 414.1 ச. மைல் பரப்பளவினதாகும். எவ்வாறு அமையினும் தீவுப் பகுதி குடித்தொகையினர் குடாநாட்டுப் பகுதியினோடே பெரிதும் பொருளாதாரம், டவியியல், போக்குவரத்து நிலைமைகளில் செல்வாக்குப் பெறுபவர்களாய் விளங்குவதால் இக் கட்டுரையில் குடாநாட்டுப்பகுதியுடன் தொடர்புபடுத்தி ஆராயப்படுகிறது.

இன்று குடித்தொகைப் பெருக்க வீதமானது இலங்கை முழுவதும் பிரமிக்கத்தக்க ஓர் நிலையிலுள்ளது, ஆரம்பகாலங்களிலிருந்த இயற்கை மரணங்கள், தொற்றுநோய் மரணங்கள் யாவும் மருத்துவ முன்னேற்றத் தால் கட்டுப்பாட்டின் கீழ் கொணர்ந்தமையே இதற்கு காரணம் எனலாம்.

வட இலங்கையில் யாழ்ப்பாணக் குடாநாடே பிரமிக்கத்தக்க சனத்தொகையைக் கொண்ட பகுதியாகும். பின் வரும் அட்டவணையானது யாழ் மாவட்டத்தின் குடித்தொகையினை குடிசனக் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்ட ஆண்டுகளின் அடிப்படையில் விளக்குகிறது:

| | |
|---|---|
| 1871 | 246063 |
| 1881 | 255383 |
| 1891 | 279284 |
| 1901 | 300857 |
| 1911 | 326712 |
| 1921 | 330541 |
| 1931 | 355425 |
| 1946 | 425251 |
| 1953 | 451124 |
| 1963 | 612596 |
| 1971 | 701738 |

இவ் அட்டவணையின் அடிப்படையில் குடிசன வளர்ச்சிப் போக்கை நன்கு விளங்கிக் கொள்ளலாம். ஆரம்ப கணிப்பீட்டுக் காலங்களில் சுமாரான வளர்ச்சிப் போக்கினைக்கொண்டிருந்த நிலைமையானது 1946ம் ஆண்டுகளின் பின் பிரமிக்கத்தக்கபோக்கினைப்பெற்றிருப்பதனைக்காணலாம். இதுவரைகாலமும் இறப்புக்கு முக்கிய காரணமாக இருந்து வந்த மலேரியாவின் தாக்கம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தமையே இந்நிலைமைக்குக் காரணம் எனலாம்.

குடிசன வளர்ச்சியில் குடியடர்த்தியே ஒரு புவியியல் பகுதியின் செல்வாக்கை

தமிழ் மக்களின் கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையும், கலாச்சார பாரம்பரியங்களின் ஒருங்கிணைவும், மக்கட்தொகையின் பெரும்பகுதி குடாநாட்டுக்குள் மக்கள் ஒடுங்கி வாழ சாதகமாய் அமைந்துவிட்டன. பொதுவான அளவீடுகளின் அடிப்படையில் பார்க்கும் போது சதுர மைலுக்கான குடியடர்த்தி குடாநாட்டுக்கும் பிரதான நிலத்துக்குமிடையே சராசரி 95:5 என்ற விகித வேறுபாட்டில் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். இந் நிலைமை 1901-ம் ஆண்டளவில் 93:2 என்ற விகிதமாக இருந்தது. இவ் விகித வளர்ச்சி விகிதமானது 1953-ம் ஆண்டுகளில் பின்பே கூடியுள்ளதை அவதானிக்கலாம். இதற்குப் பிற்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட நோய்த்தடுப்பு, விவசாய விரிவாக்கங்கள், குடியேற்றத்திட்டங்கள் போன்றவையே முக்கிய காரணமாகியது எனலாம்.

இத்தகைய வேறுபாடு காணப்படுவதை ஏன் மக்கள் விரும்பவேண்டும். குடாநாட்டின் தனிக் கவர்ச்சியானது இருவிசையாக செயற்படும் அதே நேரம்பலஇளப்புகளையும் ஏற்படுத்துகிறதுஎன்பதைஉணராமல் மக்கள் இருக்கிறார்கள், இவை துர்ப்பாக்கியமானதும் கவலைக்குரியதுமாகும். இவ் மிதமிஞ்சிய அடர்த்தியினால் ஏற்படும் பாதகநிலைமைகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**துரை எங்கரசு** பி. ஏ. (புவியியல்)

வெளிப்படுத்துவதாக அமையும். ஒரு சதுர மைலுக்கு எத்தனை மக்கள் வாழ்கிறார்கள் என்பதையே குடியடர்த்தி குறிப்பனவாக உள்ளது.

யாழ்.மாவட்டத்தின் குடியடர்த்தி நிலைமையானது ஒரு வேறுபட்ட தன்மைகளைக் கொண்டிருப்பதைக் காணலாம் அதாவது குடாநாட்டுக்கும் பிரதான நிலத்துக்குமிடையே வேறுபட்டுள்ளமையை நோக்கலாம்.

பின்வரும் அட்டவணையானது குடாநாட்டுக்கும், பிரதான நிலத்துக்குமிடையேயுள்ள குடியடர்த்தி வேறுபாட்டை தெளிவுறுத்துகின்றன

| ஆண்டு | குடாநாடு | பிரதான |
|---|---|---|
| 1901 | 679 | 16 |
| 1911 | 749 | 17 |
| 1921 | 755 | 18 |
| 1931 | 810 | 17 |
| 1946 | 913 | 21 |
| 1953 | 1122 | 31 |
| 1963 | 1346 | 55 |
| 1971 | 1517 | 77 |

### ஒடுங்கிய வாழ்வு

இவ் வேறுபாட்டிற்கு புவியியல், பௌதிக, பொருளாதார காரணிகள் முதற்காரணமாக அமைய, மற்றும் சமூக அரசியற் பண்பாட்டுக் காரணிகளும் பக்க காரணிகளாக அமைந்தமையை விளங்கிக்கொள்ளலாம்.

குடாநாட்டுக்குள் காணப்படும் செறிவான பயிற்செய்கையும், சந்தை மையங்களை முதற் கூறாகக் கொண்டு வளர்ந்த நகர வளர்ச்சியும்,

குடாநாட்டுள் பெருகிவரும் குடித்தனமானது நிலப்பற்றாக் குறையை இன்று ஏற்படுத்தியுள்ளது.

மக்கள் விரிவானது தொடர்ந்தும் குறிப்பிட்ட நிலப்பகுதியினுள்ளேயே கூறுபோட்டுக்கொண்டு அடங்கி வாழ்வதைக் காணலாம். இதற்குத் தமிழ்மக்களின் கூட்டுக் குடும்ப முறையும் பெரிதும் உதவுகிறது. பேரன், பெற்றோர், பிள்ளைகள் எல்லோரும் குறிப்பிட்ட நிலங்களையே ஒன்றாயிருந்ததை ஒன்பது பங்குகளாக்கி வாழ்கிறார்கள். குடியிருப்பை மேற்கொண்டாலென்ன அல்லது விவசாயம் மற்றும் எவ்வித முயற்சிகளை மேற்கொண்டாலும் அதற்குள்ளேயே அடங்கிவிடுகிறார்கள். இதனால் சூழல் அசுத்தமடைய வாய்ப்பாகின்றது. பழக்கவழக்கங்கள் சீர்குன்ற ஏதுவாகிறது.

### ஒரு முக்கிய கேள்வி

விவசாய நிலங்கள் துண்டாடப்படுவதனால் விளைவில் வீழ்ச்சி ஏற்படுகிறது. பெரும்பான்மையோர் வேலைவாய்ப்பு இழக்கிறார்கள். இத்தகைய துர்ப்பாக்கிய நிலைமைகளைத் தொடர்ந்தும் குடாநாட்டு மக்கள் மேற்கொள்ளவேண்டுமா? என்பதுதான் இன்றுள்ள கேள்வியாகும்.

எனவே;

மக்கள் குடாநாட்டினின்றும் இடம்பெயர்ந்து ஏனைய பகுதிகள் நோக்கி அசைய வேண்டியதே ஒரு தீர்வாக அமையும். இதனை மேற்கொள்ளவேண்டிய

அவசரமும் அவசியமுமான கடமைப்பாடும் இதுவேயாகும்.

குடாநாட்டினுள் பாரிய கைத்தொழில்கள் ஒன்று, இரண்டு தவிர ஏனைய கைத்தொழில்கள் இல்லையெனலாம் ஆங்காங்கு சிறுசிறு கைத்தொழில்கள் காணப்படுகின்றன. இவை யாவற்றிலும் 5 வீதமான மக்களே வேலைவாய்ப்பினைப் பெற்றவர்களாவர். குறிப்பிட்ட தொகையினர் அரசாங்க சேவையில் உள்ளனர் 80 வீதத்திற்கு மேற்பட்டோர் விவசாயத்திலேயே தங்கியுள்ளனர். இவ் விகிதத்தினருக்குத் துண்டாடப்பட்டுவரும் நிலங்கள் தொடர்ந்தும் போஷிப்பதற்குப் போதாது அமையுமென்பதில் ஐயமில்லை.

இலங்கைத் தமிழர்கள் கலாச்சாரப் பண்புகள், பாரம்பரியப் பழக்கவழக்கங்களில் அசையா நம்பிக்கையும், அவாவும் கொண்டவர்கள். எனவே மக்கள் இவைகளைப் பேணும் பொருட்டு ஒருபுறமாக ஒதுங்கி வாழ்வதையே பெரிதும் விரும்புவார்கள். அதற்காகவேண்டிக் குடாநாட்டுக்குள்தான் குடியிருக்கவேண்டுமென்ற நியமிதில்லை. குடாநாட்டுக்கு வெளியேயும் தமிழ்ப் பிரதேசங்கள் காணப்படுகின்றன. தமிழர்கள் வாழ்கிறார்கள் அங்கும் மரபுகள், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் போற்றப்படுகின்றன என்பதைக் குடாநாட்டு மக்கள் உணரவேண்டும்.

### சம அளவிலான வளர்ச்சிப் போக்கு

தற்காலச் சுதந்திர அரசுகள் கடைட்பிடிக்கின்ற அரசியற் கொள்கைகளும் யாழ் குடாநாட்டு மக்கள் இடம் பெயரவேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது.

இன்று அபிவிருத்திச் செயற்பாடுகள் யாவும் பிரதேச அடிப்படையில் பரவலாக்கப்பட்டு வருவதைக் காணலாம். இதனால் நாட்டின் பல பாகங்களும் ஒரே காலத்தில் சமவளவான வளர்ச்சிப் போக்கினைப் பெற்றுவருகின்றன.

காணிப் பங்கீடுகள், விவசாய விரிவாக்கல், திட்ட அமுலாக்கம், உயர் கல்வி அனுமதிகள், வேலைவாய்ப்புக்கள் யாவும் மாவட்ட அடிப்படைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது இந்நிலைமையால் ஒரு பகுதிக்குள்ளேயே மக்கள் முடங்கிக் கிடப்பார்களாயின் மேற்படி கிடைக்கவுள்ள வாய்ப்புக்கள் குறைவாகவே கிடைக்கும் இம்மக்கள் பரந்து வாழ்வார்களாயின் இதற்கு மாறாகப் பல சலுகைகளையும், வாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

குடாநாட்டு மக்கள் மட்டுப் மக்கள் பெருகிவருவார்களாயின்; மக்கட்தொகை அடிப்படையிலமைந்த நகர வளர்ச்சிகள் தோன்றும்.

குடாநாட்டுக்குள் இன்று சந்தைகளை மையமாகக் கொண்டே நகரங்கள் வளர்ந்துள்ளன. மக்கட் தொகை பெருகுமாயின் தொகை அடிப்படையிலமைந்த நகரங்களே தோன்றும். இந் நகர வளர்ச்சியானது மக்களுக்குத் தொழில் வாய்ப்புக்களைக் கொடுக்கும் என்று சொல்லமுடியாது. ஏனெனில் உலகில் வேலை வாய்ப்பினைக் கொடுக்கும் நகர மையங்கள் யாவும் கைத்தொழில்களை அடிப்படையாகக்கொண்டே வளர்ந்துள்ளன. ஆனால் குடாநாட்டுக்குள் அத்தகைய பாரிய கைத்தொழில்கள் எவையும் இல்லை என்பதை அறிவோம்.

யாழ் குடாநாட்டுக்குள் நகரங்கள் வளர்ந்தாலும் மக்களிடையே நாகரிகப் பண்புகள் காணப்படமாட்டாது.

நாகரிகப் பண்பானது ஒரு வாழ்க்கை முறை என்று லூயிஸ் வேத்' (Logis worth)

(7-ம் பக்கம் பார்க்க)

### மில்க்வைற் சிறப்பிதழ்

மில்க் வைற் 51-வது இதழ், யோகக்கலை இதழாக வெளிவந்துள்ளது.

மில்க் வைற் தொழிலதிபர் திரு. கனகராசாவின் அழைப்பின் பேரில் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த யோகாசன நிபுணரும் பல நூல்களின் ஆசிரியருமான திரு இரா. ஆண்டியப்பன் பற்றிய விளக்கமான சிறப்புக் கட்டுரையொன்றும், வழமை போல் ஏனைய பகுதிகள் தரும் அம்சங்களும் இவ்விதழை அழகுபடுத்துகின்றன. (பெ)

### காளையரே வாரீர்!

காளையரே வாரீர்-இங்கு
காடுபல தானுண்டு
வேலையில்லை என்ன நாளும்
- ஏனோ
வீண்பொழுது போக்கிறீர்

வேளையே கரைச்சிலந்த
-எங்கும்
வேண்டிய பயிர்
விளைத்தே
நாளையே கூடியிங்கு-நாட்
டின்
நற்பெருமை காத்திடுவே

வாழை வான்பயிர்
-எங்கும்
வகையாய் விளைத்தே
வாழுந மக்கேனோ-இங்கு
வசதிகள் கிட்டாதோ

மூளைதான் நமக்கிருக்கே
-இந்த
மூடவாழ் வெதற்காக
நாளைதானும் நற்பணி
-இங்கு
நம்பிநீரும் நாடுவீரே

ஆளுக்கரையேக்கர்-நமக்காய்
அரசிடமே பெற்றிடுவீர்
வாழ்வளிக்க வான்பயிர்
கள்-எங்கும்
வளமாக விளைத்திடுவே

தாழ்வுக்கிடமின்றி-என்றும்
தன்மானங் காத்திடவே
ஏழைசட் கேற்ற-ஒரு
இனிதான தொழிலாமே

வருவாரை வன்னிநகர்
-என்று
வரவேற்று வாழவைக்
கும்
எந்தவொரு ஏழைதானும்
-இன்று
ஏங்கிக் கிடப்பதேனோ

அந்தோ நம் பெருமை
-எல்லாம்
அகிலமறிந் தேத்திடவே
சொந்தமுயற் சிகொண்டே
-இனியும்
துலக்கிடலாம் நாட்டி
னையே

பேடைப் பேச்சுக்கள்-என்
றும்
மிக நாட்டை உயர்த்
திடுமோ
சோடைபிடி யெல்லாம்
-உடன்
கொட்டு மழையாமோ

ஏட்டுப்பி ரசாரம்-நாட்டில்
எப்பயிரை வளர்த்
திடுமோ
நாட்டைச் செழிக்கவைக்க
-இன்று
நன்முயற்சி வேண்டு
வதே

நாட்டுப்பற் றுடையீர்
-எங்கும்
நற்பயிர்கள் நாட்டிடுரே
காட்டைக்க ளைந்தே-நல்ல
கழனிபல ஆக்கிரே

தோட்டம் துரவெலாம்-நீர்
சோம்பலின்றிப் பயிர்
செய்தே
நாட்டை உயர்த்தியே-மக்
கள்
நற்பசியைப் போக்கிடீர்

காடுநில மிருக்க-இங்கு
கடையரிசி நமக்கெதற்கு
பாடுபட்டே நாமுழைத்
தால்-கொடிய
பட்டினியைப் போக்க
லாமே

சாடுவீர் பதுக்கலர்-என்றும்
சஞ்சலங் காணவே
நாடுசெழித் தெங்கும்-இந்த
நாசமெலாம் நீங்கிடுவே

நேரம்மிகவுண்டு-நம்
நெற்றிவேர்வை சிந்தி
நிற்க
ஆர்வமதாப் பயிர்செய்தே
-நாளும்
அறவாழ்வு வாழ்ந்
திடுரே

வீரம்மிக நமக்கிருக்க-அங்கு
வீண்வாழ் வெதற்காக
ஏர்பிடித்து வாழ்ந்திடுவே
'என்றும்
ஏற்றம் மிகக் காண்பீரே!
-கண்டாவளை உழவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல் வைத்தியம் -8

# பயோறியாவை மாற்றுவதில் சத்திர சிகிச்சை

பல்வைத்திய கலாநிதி பா. சோ. பாரதி

நோயின் ஆரம்ப நிலையில் கவனமற்று சிகிச்சை செய்விக்காது இருப்பவர்களுக்கு சத்திர சிகிச்சை தேவைப்படுவதுடன் சிறந்த பலனையும் கொடுக்கிறது. சத்திர சிகிச்சை என்றவுடன் பலர் பயந்து செய்விக்காது இருப்பது காணக் கூடியதாக வுள்ளது. ஆனால், பொதுமக்களுக்கு விஞ்ஞான அறிவியலில் கூடுதலான விளக்கம் ஏற்பட்டுவரும் இக்காலத்தில் சத்திர சிகிச்சைக்குப் பயந்து வருத்தத்தை மாற்றுவிக்காது இருத்தல் புத்தியுள்ள செயலாகாது.

நாம் முன்பு கூறியபடி பல் சூழிழைய நோயை அதன் ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்த சாதாரணமாக வைத்தியரைக் கொண்டு பற்களைச் சுத்தப்படுத்தலும் (Scaling) அதன்பின்பு (Oralhygiene) பற்சுகாதாரத்தில் கவனம் எடுத்தலுமே போதுமானது. இப்படிப் பாதுகாப்பு எடுத்தும் இரத்தக் கசிவோ அன்றி சிதல் ஊறுதலோ முற்றாக நிற்காதிருந்தால் நோய்முற்றிய நிலையைக் காட்டுவதுடன் சத்திர சிகிச்சை தேவைப்படும் என்பதையும் பொதுப்படையாகக் காட்டும். ஆனால் வைத்தியர் பரிசோதித்த பின்பே சத்திரசிகிச்சை தேவையென்ற முடிவுக்கு வரலாம். இந்நிலையில் முரசு பற்களுடன் ஒட்டுப்பட்டு இருக்கும் இடத்திலிருந்து அதன் விளிம்பு வரைக்கும் உள்ள இடைவெளியில் வளர்ந்திருக்கும் சவ்வுகள், தேங்கியிருக்கும் படிவங்கள், முதலியவற்றை விசேட நுண்ணிய ஆயுதங்களைக் கொண்டு சுத்தப்படுத்தி [Sub-gingival இந் நோயைக் குணப்படுத்தலாம். இதற்கும் மாறுதவிடத்து சத்திர சிகிச்சை தேவையாகிறது.

### சத்திர சிகிச்சைமூலம் முரசைக் குறைத்தல்: [Gingibectomy]

சில நோயாளருக்கு இந்த நோய் கூடுதலான அளவு முரசு வீக்கத்தைக் கொடுக்கும். அல்லது முரசு வளர்ச்சியுற்று பற்றலைப் பகுதியை ஓரளவு மூடியவண்ணம் இருக்கும். பற்களினின்றும் முரசு பிரிவுபட்டிருக்கும். முரசில் ஏற்படும் இந்தவித மாறுபாடுகள் உணவுத் தேக்கத்தைக் கூட்டி இந்நோயைக் கூட்டும். இந்நிலையை மாற்றுவதற்கு முரசைச் சத்திர சிகிச்சை மூலம் குறைத்து, பிரிவுபட்ட முரசைப் பற்களோடு ஒட்டவைத்தல் அவசியமாகிறது. இளம் வயனதிபருக்கு இந்தச் சிகிச்சை வரண சுகத்தைக் கொடுக்கிறது. முரசு சுகாதாரமான முரசாக வளர்ந்து பற்கழுத்துடன் இறுக்கமாக ஒட்டிவிடுகிறது. இதனால் 'பயோறிய' நோய் முற்றாகத் தடைப்படுகிறது.

### சத்திர சிகிச்சை மூலம் முரசைப் பற்களின்றும் பிரித்தெடுத்து மீண்டும் ஒட்டவைத்தல்: (FLAP and CURETTAGE-OPERATION)

சிலருக்கு மேற்கூறிய நிலையையும் கடந்து நோய் முற்றியிருந்தால் இந்தச் சிகிச்சை செய்யவேண்டியது அவசியமாகிறது. நோய் நிதானத்துக்குரிய இடைவெளி (Patholo-gical Sdace) கூடுதலாக இருந்தாலும், பற்களுக்கிடையில் உள்ள என்பு கரைந்து அவ்விடத்தில் வேறு சவ்வுகள் வளர்ந்திருந்தாலும் அல்லது பற்பேத்தைக் கட்டுகள் அடிக்கடி தோற்றி வந்தாலும் இந்த விதமான சத்திர சிகிச்சையால் கூடிய பலனைப் பெறலாம். பாதிக்கப்பட்ட பற்களினின்றும் முரசைப் பிரித்தெடுத்து பற்களுக்கும் என்புக்குமிடையில் இருக்கும் 'சவ்வுகள்' (Grannlaton tissue) படிவங்கள் (Subgingival tar-tar) பழுதடைந்த என்பு முதலியவற்றை நுண்கருவிகள் மூலம் அகற்றி மீண்டும் முரசைப் பற்களுடன் பொருத்தி விடுவது மிகவும் நன்மை பயக்கும். இப்படிச் செய்வதனாலே பிடுங்கப்பட வேண்டிய நிலையிலுள்ள பற்களைப் பாதுகாக்க முடிகிறது. கடந்த சில ஆண்டுகளில் நான் மேற்கொண்ட சத்திரசிகிச்சைகளின் புள்ளி விபரத்தைப் பார்ப்போம்.

### முரசு குறைத்தல்- [GINGIVECTONY[

| ஆண்டு | சத்திரசிகிச்சை செய்யப்பட்டோர் தொகை: | வயது 15•30 | வயது 30-45 | பூரண சுகம் அடைந்தோர் | திருப்திகரமான சுகம் அடைந்தோர். |
|---|---|---|---|---|---|
| 1977 | 132 | 120 | | 114 | 6 |
| | | | 12 | 5 | 7 |
| 1978 | 155 | 128 | | 120 | 8 |
| | | | 27 | 11 | 16 |
| 1979 | 176 | 142 | | 133 | 9 |
| | | | 34 | 19 | 15 |

### முரசைப் பிரித்துச் சுத்தப்படுத்தி பொருத்துதல் [FLAP and CURETTAGE]

| ஆண்டு | சத்திர சிகிச்சை செய்யப்பட்டோர்தொகை: | வயது 15-30 | வயது 30-45 | பூரண சுகம் அடைந்தோர. | திருப்திகரமான சுகம் அடைந்தோர். |
|---|---|---|---|---|---|
| 1977 | 94 | 20 | | 18 | 2 |
| | | | 74 | 62 | 12 |
| 1978 | 86 | 19 | | 14 | 12 |
| | | | 67 | 61 | 6 |
| 1979 | 131 | 8 | | 8 | |
| | | | 123 | 109 | 14 |

சத்திர சிகிச்சை செய்து பாதுகாக்கக்கூடிய வாய்ப்பிருந்தும் பயத்தினலும், வசதியீனத்தாலும் பற்களைப் பாதுகாக்காது விட்டவர்களும், நோயைப் பற்றிய கரிசனையில்லாது வாளவிருந்து பின் பற்களைப் பிடுங்குவித்தவர்களும்:

| வருடம் | வயது | நோயினால் பாதிக்கப்பட்டுப் பற்களை இழந்தோர் தொகை |
|---|---|---|
| 1977 | 15-30 | 557 |
| | 30 | 3880 |
| 1978 | 15-30 | 454 |
| | 30 | 5604 |
| 1979 | 15-30 | 863 |
| | 30 | 6476 |

### இந்த புள்ளி விபரத்தினல் நாம் கிரகிக்கக்கூடியவை:-

1. வருடாவருடம் இந்நோயினால் பாதிக்கப்பட்டுப் பற்களை இழப்போர் தொகை அதிகரிக்கிறது.

2. இளம் வயதினரையும் இந்நோய் பாதிக்கிறது. பலர் இளம் வயதிலே பற்களை இழந்து செயற்கை பற்களை உபயோகிக்க வேண்டியவர்கள் ஆகின்றனர்.

3. இளம் வயதில் செய்யப்படும் சிகிச்சை கூடிய பயனை அளிப்பதுடன் பற்களைப் பாதிக்க முடிகிறது. சத்திர சிகிச்சை தேவைப்பட்டால் அதைத் தாமதிக்காது இளம் வயதிலேறே செய்வித்தல் கூடிய பயனை அளிப்பதை அவதானிக்க முடிகிறது.

4 மூடநம்பிக்கைகளை மறக்கவும், பிழையான விளக்கங்களை உணர்ந்து திருத்தவும், மக்களுக்கும் பற்சுகாதாரக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தவும் ஏதுவாக இருக்கிறது.

5. சத்திரசிகிச்சைக்கு வந்த 30 வயதுக்கு மேலானவர்களில் பதினைந்து வீதமானோருக்கு 'ஆத்திறைற்றிசு' (Arehirihs) என்னும் நோயும் காணப்பட்டது பலவருடங்களாக இவர்கள் பயோறியாவை மாற்றுது இருந்தவர்கள். ஆத்திறைற்றிசு' என்று கூறப்படும் (வாதம்) நோயைக் கொண்டுவருவதில் "டயோறியா" முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது.

(தொடரும்)

### சோஷலிஸ யதார்த்தவாதம்

'மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் உள்ள உறவை அறிந்து அதை மனிதகுல வளர்ச்சி நோக்குடன் சித்தரிக்க வேண்டும்' என்பதே சோஷலிஸ யதார்த்த வாதத்தின் சாரம்சம்.

நூல்: 'இன்றைய தமிழிலக்கியத்தில் மனிதன்'

# இலங்கையில் அழிக்கப்பட்டு வருகின்ற காட்டு வளங்களும் பாதுகாப்பும்

கி. ஆறுமுகம் பி. ஏ. (புவியியல் சிறப்பு)

இயற்கை வளங்களில் ஒன்றாக விளங்கும், காட்டு வளங்களைப் பாதுகாப்பதென்பது, காடுபடு பொருட்களை உபயோகிப்பதை மட்டுப்படுத்தல் என்பதன்று. காடுகளை இயன்ற வகையில் அதிகமாக வளர்த்தலையும், அவற்றை மிகுந்த திறமையுடன் உபயோகித்தலையுமே இது குறிக்கின்றது. பலவகைகளில் பயன்பட்டுவரும் காட்டுவளம், நாட்டின் பொருளாதாரத் துறையில் ஒரு முக்கிய அம்சமாகும்.

இலங்கையின் மொத்த நிலப் பரப்பு 1,62,28,230 ஏக்கர்களாகும். ஆரம்ப காலத்தில் இந்நிலப்பரப்பில் அரைப் பங்குக்கு மேல் காடுகள் காணப்பட்டன 1960-ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 71,64,714 ஏக்கர்களே காடுகளாகக் காணப்பட்டன. 1966-ம் ஆண்டின் பின் கிராம அபிவிருத்திக்காக 15 வீதம் வரையிலான காடுகள் அழிக்கப்பட்டன இன்று மொத்த நிலப்பரப்பில் 40 வீதத்திற்குக் குறைவாகவே காட்டுப் பகுதிக காணப்படுகின்றன. இதில் 80 வீதம் வரண்ட வலயத்தில் உள்ளன.

### காட்டுப் பயன்பாடுகள்

காட்டு வளங்களில் இருந்து மரப்பலகை முதலான கட்டிடப் பொருட்கள், விறகு, பழம், பிசின், எண்ணெய், மூலி வகைகள், மிருகத்தின் என்பவற்றுடன் சுவாத்தியத்தைச் சீராக்கல், மண்ணரிப்பைத் தடுத்தல், வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்தல், மண்ணின் நீர் வளத்தைப் பேணுதல், மழையைப் பொழியத் தூண்டுதல், காட்டு விலங்குகளுக்கு உறைவிடமளித்தல், நாட்டின் வனப்பைப் பெருக்குதல், பொழுது போக்குக்கு உகந்த இடமாக அமைதல், காற்றைத் தடைசெய்தல், காபனீரொட்சைட்டை உறிஞ்சுதல் போன்ற பல நன்மைகள் காட்டின் மூலம் கிடைக்கின்றன. காடுகள் தொடர்ந்து அழிக்கப் பட்டுவருமானல், இவை மூலம் கிடைக்கும் பயன்பாடுகள் குறைவடைந்து செல்வதுடன் நாளடைவில் பொருளாதார வளங்குன்றி மேல்நாடுகளை எதிர் நோக்கி நிற்கும் நிலை ஏற்படும். எனவே அழிக்கப்பட்டு வரும் காட்டு வளங்களைப் பாதுகாப்பது, நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

### அழித்தலில் அவதானம்

காடுகளைப் பாதுகாக்கும் பொழுது சில முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் காடுகளைத் தேவைக்கேற்ப வெட்டும் பொழுது, முதிர்ந்த மரங்களையே வெட்டுதல் வேண்டும். மரங்களை விழுத்தும் பொழுது, பிற மரங்களுக்கு தீங்கு விளைவிக்காது இருக்க வேண்டும். காடுகளைத் தீயிலிருந்து பாதுகாப்பதற்கு, மரக் கழிவுகளை நீக்குதல் வேண்டும். தீ, பூச்சி, நோய் போன்றன ஏற்படாதவாறு கவனிக்க வேண்டும். மந்தைகளின் மிதமிஞ்சிய மேய்ச்சலைத் தடுத்தல் வேண்டும். குறித்த பகுதிகளால் மாத்திரம் வாகனங்களைச் செலுத்துதல் வேண்டும். உத்தரவு பெற்று மரம் வெட்டுதல் வேண்டும். அழிக்கப்பட்ட பகுதிகளில் புதிய மரங்களை நடுதலும், நல்ல இன [illegible] மரங்களை நடுதலும் அவசியம். ஒவ்வொரு இனத் தாவரத்தினதும் இளமை, முதுமை, முதிர்ச்சி ஆகிய நிலைகளை அறிந்திருத்தலுடன், அவை எவ்வெப் பகுதிக்கு ஏற்றவை எனத் தெரிந்து அதற்குகந்த வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

நமது தேவைக் கேற்ப அதிக மரங்கள் நாட்டப்பட வேண்டும். அத்துடன் அவை வேகமாக வளரக்கூடிய மரங்களாகவும், வலுவுள்ளதாகவும் இருப்பது அவசியம். வன இலகா இவ்விடயத்தில் சிறப்பாகத் தொழிற்படுகின்ற தெனலாம். வேகமாக வளரும் தேக்கு, சீமை வேம்பு, கற்பூரம், பைன் போன்ற மரங்கள் பல ஆயிரக் கணக்கான ஏக்கர் பரப்பில் வன இலாகாவினல் ஆண்டு தோறும் நடப்படுகின்றன.

### குறைந்துவரும் நிறைந்த வளம்

மொத்தமாகக் காணப்படும் காடுகளில் 80 வீதம் வரண்ட வலயத்திலும், 20 வீதம் ஈர வலயத்திலுமுள்ளன. வரண்ட வலயக்காடுகள் மதிப்புக் குறைந்தவையாகும். காடுகள் தொடர்ந்து வெட்டப் பட்டுவருவதால் முதிரை, கருங்காலி, பாலை என்பன போன்ற மரங்கள் குறைந்து வருகின்றன. இதனால் இங்கு விரைவில்வளரக்கூடிய தேக்கு, மலைவேம்பு போன்றவை நடப்படுதல் அவசியமாகும். 1961/62ம் ஆண்டுகளில் தேக்கு, மலைவேம்பு, கியூக்கலிப்கஸ் ஏனையவை முறையே 3720, 3008, 817, 239 ஏக்கர்களில் புதிதாகநடப்பட்டன. 1962/63 ஆண்டுகளில்தேக்கு, யூப்கலின், பலா, மஹோகனி, ஏனையவை என முறையே 21250, 11840, 11930, 45900 ஏக்கர்களிலும் புதிதாக நடப்பட்டன.

இலங்கையில் காணப்படும் காடுகளில் சிங்கராஜாக்காடு வேறுபட்டதாகவும், அமேசன், கொங்கோ காடுகளை ஒத்ததாகவும், மனிதத்தலையீடு குறைந்ததாகவும் காணப்படுகின்றது. இதனை வேறுவிதமாகப் பாதுகாக்கவேண்டியது அவசியம். ஏனெனில் இலங்கையில் எஞ்சியுள்ள கன்னிக் காடாக இது விளங்குவதால் இதைப் பாதுகாத்தல் அவசியமாகும்.

### காட்டுப் பாதுகாப்பு

ஈரலிப்புப் பிரதேசத்திலுள்ள காடுகளின் வளத்தை உச்ச அளவுக்குப் பயன்படுத்தும் நோக்கமாக 3 ஆண்டு ஆராய்ச்சி ஒன்றை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகளின் விசேட நிதியிலிருந்து உதவி கோரிப் பெறப்பட்டது. பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து அரசாங்கம் ஆஜென்ரீனா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலிருந்துமரத்தை இறக்குமதிசெய்தது. அத்துடன் காட்டிலாகா, வனவிலங்கு பாதுகாப்பு இலாகா என்பவற்றை நியமித்தும், புதிய மரங்களை நட்டும், விஞ்ஞான ரீதியாக மரம் வெட்டியும், பிரசாரங்களைச் செய்தும் மரக் கூட்டுத்தாபனம், வனபாதுகாப்புச் சட்டம், உத்தரவுப்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இந்திய நாட்டில் கலையும் யோகசாதனையும்-2

# உள்ளொளியினால் உந்தப்பட்டவர்களே கலைஞராவர்!

**உண்மையான கலைஞன் அநித்தியமானவன் அல்லன். அவன் மகாவீர புருஷன்; அவன் காணும் சக்தியும் கேட்கும் சக்தியும் பெற்றுள்ளவன் ஆவான்.**

ஆங்கில மூலம்:
கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி

தமிழாக்கம்:
வரலாற்றுவாணர்
வை. முத்துக்குமாரசுவாமி

### போகம் என்றால் என்ன?

'போகம் எனப்படுவது சத்தியம் என்ற பிரமாணத்தால் பண்படைந்து வெளித்திகழும் இயற்கையானதும், மேன்மையானதுமான மனித குணமே. இஃது சுயநலம், தாமதம் என்னும் இரு குணங்களின் கெடுபிடியிலிருந்து தப்பவே ஏற்படுகின்றது. எங்களின் மேலான பண்பு என்றும் இன்பமயமானது. ஆகையால் நாம் சத்தியத்தைக் கடைப்பிடித்து இன்பம் பரமானந்தத்தை நிகர்த்தது'

Prof. V. V. SOVARI,
VEDICMAG.
Vol-II, No. 10

இந்தக் கருத்து 'நெயோ பிளோற்றினஸ்' (Neo Plotinus) என்னும் மரபுக்கொள்கை உடையவரின் தத்துவக் கருத்துக்கு இசைய உள்ளது. பிளோற்றினஸ் என்னும் தத்துவஞானியின் கூற்றுப்பின் வருமாறு:-

'கருத்துக்கு உகந்த அழகில் மகிழ்வது பற்றிய எமது விளக்கம் இது:-

'ஆத்மாவானது தன்னை ஒத்த பிறிதொன்றைக் காணுங்கால் அதனில் பேருவகை எய்துகின்றது.'

நிலைத்த சீரும் (Good in Itself-சத்து) சிறப்பும் (Beauty-ரசம்) ஆகிய இரண்டு நியதிகளையும் பெறுதலே ஆத்மாவின் இயற்கையான தூண்டுதல்களாம். இக்குறிக்கோள்களை அடையும் வகை, சாதாரண (ஊனக்கண்) காட்சிகளைத் தவிர்த்து, மனக்கண் (அகக்கண்காட்சி) பார்வையைத் திறப்பதேயாம். இந்தச் சக்தி யாவருக்கும் கிடைக்கக் கூடியதாக இருந்தும், அதனைப் பயன்படுத்துபவர் எண்ணிக்கையில் மிகச் சிலரே யாவர்.

வேறு ஒரு ஒப்புமை-மகான்களினதும் வீரப்புருஷோத்தமர்களினதும் வாழ்க்கை வரலாறுகளில் கிடைப்பதாகும். கிறிஸ்துநாதரும் அவருடைய சிஷ்யர்களும் அவர்தம் பேச்சிலும் செயல்களிலும் உள்ளொளியினால் உந்தப்பட்டமையினால் அவர்களை வரும் கலைஞர்களேயாவர்.

'கலையும் சமயமும் ஆத்மாவின் சலனங்கள் அல்லது பிரபஞ்ச வாழ்க்கையில் 'தன்னை' மறக்கலாகும். கலைஞன் காணும் முழுக் காட்சி அல்லது பாதிக்காட்சி அருவமானதாக இருப்பினும் அதனைத் தனதாக்கிவிடின் 'அது அவன் ஆழ உள்ளத்தில் இருந்தே செயற்படுவது ஆகா'

B. De. Selincourt-HIBBERT Journal, Jan, 1907.

கலையின் உண்மை முக்கியத்துவம் சிறப்பாக மோட்சம் அடைவதற்குச் சாதனமாக விளங்குவதேயாகும். அது 'நான்', 'எனது' என்பவற்றை மறந்து 'தன்னை' Self தன்னால் அடைய முயல்வதே. அது கலைஞனை மட்டும் அல்ல காண்போனையும் பாதிக்கும் சிறப்பான நிலை.

மோட்சம்: எல்லாச் சமயங்களின் குறிக்கோள்- 'தன்னை உணர்தல். அதாவது அனுபவ வாயிலாக அல்லது புலன் வாய்ப்பட்ட உணர்வினைத் தாண்டி எல்லாப் பொருட்களின் ஊடே வீற்றிருக்கும் தன்னை (Self) அடைவதாகும். அது ஏனெனில் தெய்வத்தை இழந்துவிடுவார்கள் என்பதற்காக அல்ல. ஆனால் அவர்களையே இழந்துவிடுவார்கள் என்னும் நியாயத்தினாலேயே நிர்வாணப்பதவி (Nirvana) அல்லது ஒன்றுமில்லாமை என்னும் குறிக்கோளைப் போதிக்கும் கீழ்நாட்டுச் சமயங்களினின்று, மேல்நாட்டார் விலகிக்கொள்வதின் இரகசியம் இதுவேயாகும். ஆனால், எவன் ஒருவன் தனது வாழ்வை இழக்கிறானோ அவனே அதனைக் காப்பான். எவன் ஒருவன் தன் வாழ்வைக் காக்கிறானோ அவனே அதனை இழந்துவிடுவான். உதாரணமாக ஒரு காட்டுமிராண்டியின் 'உணர்வை'யும், ஒரு சீர்திருந்திய பண்பாடுள்ள மனிதனின் உணர்வையும் சீர்தூக்கிப் பார்ப்போம். காட்டுமிராண்டியின் தன் வெளியுணர்வு (Self Consciousness) நன்மையைப் பற்றிய கருத்துக்கள், தற்பாதுகாப்பு, வேட்டை ஆடுதல், சண்டைபிடித்தல் என்பனவாகும். இவை நாகரீக மனிதனின் கண் உள்ளுணர்வு மண்டலத்துக்குள் (Sub Cocsciousness) அடைக்கப்பட்டிருக்கிறது.

விரும்பியபோது வெளி உணர்வுக்குக் கொண்டுவரத் தக்கவகையில் அமைந்துள்ளது. அப்படி வெளிக் கொணர்ந்தாலும் அது மனதின் முழுப்பாகத்தையும் நிரப்புவதில்லை பண்புடைய மனிதனின் சாதாரண உணர்வு காட்டுமிராண்டியின் உள்ளத்துக்கு அப்பால்உள்ளது. அன்பு, கலை, தத்துவம் முதலியவற்றால் ஏற்படும் பேருணர்ச்சிகளாலும், யோகசாதனையாலும் மேலான உள்ளொளியை அவன் பெறமுடியும். அது இழப்பன்று; அது மதிப்புக்கரிய இலாபமே. அது அழிவல்ல! அது பெறுதற்கரிய பெறுபேறே!

ஆயினும் உலக அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு உணர்வைப் பொறுத்தமட்டில், பேருணர்வுகளை எதிர்மறைகளால் விளக்கலாமே ஒழிய உதாரணங்களால் அன்று.

பிளேற்றோ என்னும் கிரேக்க ஞானியின் கூற்று என்னவெனில்,

நாங்கள் காணும் பொருள்கள் எங்களைச் சூழ்ந்துள்ள வெளிப்பொருள்கள் யாவும், நாங்கள் காணாத நிலையான பொருள்களின் பிரதிவிம்பங்களேயாகும்.' அதேபோல் இந்தியரின் ஆத்மீக (வேதாந்தக் கருத்துச் சூழலில், ஓர் 'தேவநாகரி' எனப்படும் சமஸ்கிருத பாஷை உதாரண முறையில் நோக்கும்போது தேவர்களின் செம்மொழியென்றே செப்பலாம். ஓர் இந்துக்கோவிலும் அதன் கிரியைகளும் உண்மையில் கைலயங்கிரியில் தேவாதி தேவராகிய சிவபெருமானுக்கு நடைபெறும் ஆராதனைகளின் பிரதிவிம்பங்களாக அமைந்துள்ளன. அங்கு உண்மைகள் (Realities) என பிளேற்றோ என்னும் தத்துவஞானியால் குறிக்கப்படும் கருத்துக்கள் (Ideas) உள்ளடங்கி இருக்கின்றன. அவற்றின் நிழல்

இந்து தனது வாழ்வு, இசை ஓவியம் முதலிய அருங்கலைகள், கட்டிடக்கலை முதலியன வேறு எங்கோ உள்ள உறுதிப் பொருள்களின் பிரதிவிம்பங்கள் அல்லது எதிரொலிகள் என்று கருதுகிறான். அரச மாளிகை அமைக்கும் சிற்பாசாரியார், தேவ உலகத்தினரின் மாடமாளிகையின் பிரதிப்படத்தைத் தருவித்துத் தாருங்கள் என்று விண்ணப்பிக்கின்றான். கலைகளையே அநித்தியமான மாந்தர் சகத்தில் காணுகின்றனர். ஆனால் உண்மையான கலைஞன் அநித்தியமானவன் அல்ல. அவன் மகாவீர புருஷன்; அவன் காணும் சக்தியும் கேட்கும் சக்தியும் படைத்துள்ளவன் ஆவான். அவன் தான் கண்டவற்றைத்-தனது இலட்சியப் பொருளை உண்மையாக எமக்குக் காண்பித்து, எம்மை உயர்வு செய்ய முடியும்; தான் கண்ட உள்ளொளிக் காட்சியை ஒரு நொடிப் பொழுதாவது எமக்குக் காட்டுவது அவனுடைய கடமையாகும்.

அவ்வாறு கற்பனா ரீதியில் அமைக்கப்பட்ட கட்டிடக்கலை, மகத்தானதும் பேரெழில் வாய்ந்ததுமாக இருப்பதில் கடுகளவேனும் ஆசங்கை அல்லது ஆட்சேபம் இருக்கவேண்டுமா? அவ்வகை எழுந்த கருத்துக் கருவூலங்கள், வாழ்க்கையின் சீரிய நிலையிலும் சாந்த நிலையிலும் பிரதிபலிப்பதில் தவறுமா? அந்த உன்னத மனோநிலையில் ஒரு சிற்பி-தனி மனிதன் ஒருவனின் அபிலாஷைகளின் இருப்பிடமானவன் அல்ல. அவன் அண்ட சராசரங்களின் ஓர் அம்சமாகி, அந்த விரிந்த பிரபஞ்சத்தின் எழிற்சந்தம் மாறாத பிரமாணங்கள் முதலியவை திகழும் உருவங்கள் சமைக்கும் உண்மைக் கலைஞன் ஆகின்றான்.

(தொடரும்)

## காட்டு....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரம் வழங்கல் போன்றவற்றைச் செய்தும் காட்டு வளத்தைப் பாதுகாத்துவருகின்றது.

மேலைநாடுகளுடன் பார்க்கும்பொழுது இலங்கைக்காட்டு வளங்களில் சிறிய பகுதியையே பெறுகின்றது. தென் அமெரிக்கா, கனடா, தென்னாபிரிக்கா, ரஷ்யா போன்றவை காட்டுவளங்களிலிருந்து பெரும் பயனைப்பெறுகின்றன. கனடாவில் மரம் வெட்டுதல் சிறப்புவாய்ந்த தொழிலாக இருப்பதுடன் இம்மரங்களைக் கொண்டு காகிதக்கூழ்போன்ற கைத்தொழில்கள் விருத்தியடைந்துள்ளன.

### பேணலும் பயன்பாடும்

இலங்கையில் அழிக்கப்பட்டுவரும் காட்டுவளங்களைப் பாதுகாப்பதென்பது மிகமுக்கியமானதொன்றாகும். அவ்வாறு பாதுகாக்காமல் விடுவோமானால் காட்டிலிருந்து கிடைக்கும் அத்தனை பயன்பாடுகளையும் இழப்பதோடு எதிர்காலத்தில் இத்தேவையை நிறைவுசெய்ய வெளிநாடுகளைக் கையேந்தி நிற்கவேண்டிய நிலை ஏற்படும்.

வனபரிபாலன இலாகாவின் கணிப்பீட்டின்படி கிட்டத்தட்ட 2005-ம் ஆண்டளவில் நமது தேவையின் பெரும் பகுதியை நாட்டப்பட்ட காடுகளிலிருந்தும் பெறக்கூடியதாக இருப்பதோடு, கவனமாகப் பரிபாலிக்கப்படுவதன் மூலமும் வேறு சில கன்னெலிய, இலிமலே போன்ற காடுகளிலிருந்தும் பெறப்படும் மரத்தின் அளவையும் சேர்த்தால் நமது தேவை பூர்த்தியாகும் என்பதில் ஐயமில்லை.




நூல்: கோயில்.

ஆக்கியோன்: இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

வெளியீடு: கொழும்பு அண்டர்சன் மாடி நிரைச் சைவ கலாசார மன்றம்

யாழ்ப்பாணத்திலுள்ள சைவ மக்கள் பலருக்கு சிதம்பரநாதன், சிதம்பரப்பிள்ளை என்ற பெயர்கள் உண்டு. யாழ்ப்பாணத்திலிருந்து பல நூறு மைல்களுக்கப்பால், தென்னிந்தியாவில் விளங்கும் சிதம்பரத்துக்கு யாழ்ப்பாணத்திலேயே தருமசாதனம் செய்யப்பெற்ற காணிகள் பல உண்டு. நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் தமது சைவக் கல்விப்பணியினைமேற்கொண்டு நடத்தினார்கள். இவையெல்லாம் யாழ்ப்பாண மக்களுக்குச் சிதம்பரத்திலுள்ள ஈடுபாட்டினைக் காட்டுவன. இவ்வாறு யாழ்ப்பாணச் சைவ மக்கள் (மட்டுமன்றி ஏனைய சைவ மக்களும்) ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக விளங்குவது அத்தலத்தின் அளவிடக்கரிய மகிமையே.

'தீர்த்தமென்பது சிவகங்கையே
ஏத்தருந் தலம் எழிற் புலியூரே
மூர்த்தி யம்பலக் கூத்தனதுருவே'

என்பது குமரகுருபரர் வாக்கு. சிதம்பரத்தின் மகிமையை எண்ணிறந்த நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. அவற்றுள் வெகு சிறப்பு வாய்ந்தன இரண்டு, ஒன்று வடமொழியிலுள்ள சிதம்பர மான்மியம், மற்றது உமாபதி சிவாசாரியரின் கோயிற்புராணம். நாவலர் பெருமான் சிதம்பரமான்மியத்தைத் தமிழ்ப்படுத்தியும் கோயிற்புராணத்துக்கு உரை வகுத்தும் உள்ளார்கள். இவ்விரு கருவூலங்களும் அநேகர்க்குக் கிடைத்தற்கருமையும் (இக்காலத்து எம்போல்வார்க்கு) படிக்கக் கடுமையும் நோக்கி, அவற்றின் அரும் பொருள் நவநீதச் சுவை கொண்டு 'கோயில்' அமைத்துள்ளார்கள் கலாநிதி பண்டிதமணி அவர்கள்

கோயில் என்னும் இச்சிறு நூல் 6 அத்தியாயங்களைக் கொண்டது முதல் அத்தியாயத்திற் சிதம்பர தல மகிமை பேசப்படுகின்றது. சைவப் பெருமக்கள் சற்காரியங்களைத் தொடங்குகின்றபோது 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லி ஆரம்பிப்பது வழக்கம். அவ்வாறே திருச் சிற்றம்பலம் என்ற வார்த்தையோடு தொடங்குகின்றது நூல்! திருச்சிற்றம்பலம் என வழங்குகின்ற சிதம்பரத்துக்கு கோயில் என்றும் பெயர் என்பது முதற் செய்தியாம். உமாபதி சிவாசாரியரின் கோயிற் புராணத்தை அடியொற்றிக் 'கோயில்' என்னும் சிதம்பரம் தோன்றிய வரலாறு பேசப்படுகின்றது. மத்தியந்தினமுனிவர் தமது மகனுக்குக் கூறுவதாகக் 'கோயில்' வரலாறுவளர்கிறது வரலாற்றுரையின்போது மகன் கடவுளை எங்கே காணலாம்? என்று தந்தையைக் கேட்பதும், தந்தை விளக்கம் சொல்வதும் பண்டிதமணி அவர்கள் தமக்கே உரிய பாணியில் கலாசாலையில் கேட்போர் அள்ளூறப் பாடலுக்கு விளக்கஞ் சொல்லுகின்ற பாங்கை நினைவுபடுத்துகிறது. ஆசிரியர் தம் முன்னுரையிற் கூறியவாறே கோயில் 'சிதம்பரம்' என்னும் பெயர்பெற்ற காரணத்தை நாவலர்பெருமான் வார்த்தைகளைக் கொண்டே விளக்கிச் சொல்லுகின்றார். சிதம்பர மகிமையைச் செவிமடுத்த சிறுபிள்ளை தில்லை வனத்தைத் தேடிச் செல்லச் சித்தங்கொள்கின்றது. இந்நிலையில் 'ஒரு' தவப் புதல்வன் தந்தைவழியில் ஏழுதலைமுறைகளையும், தாய்வழியில் ஏழு தலைமுறைகளையும் தன் வழியில் ஏழு தலைமுறைகளையும் உய்யக்கொள்கின்றான்'. எனப் பண்டிதமணி அவர்கள் குறிப்பிட்டிருக்கு வார்த்தை வேகடஞ் செய்மணி என மின்னுகிறது.

தில்லைவனத்தைத் தேடிச் சென்ற பாலமுனி, வியாக்கிரபாதர் ஆதல், வசிட்டரின் தங்கையை மணந்து உபமந்யு முனிவரைப் பெற்றெடுத்தல், தந்தை மத்தியந்தினர் தில்லைக்கு வந்துசேர, மூவரும் சேர்ந்து திருமூலட்டானேசுரரை வணங்கியிருத்தல், வியாக்கிரபாதர் சிவயோகங் கூடிய நிலையில் இறைவன் முன்னர் தாருகவனத்தே தாண்டவமாடிய காட்சி தெருட்டல், ஆகிய விடயங்கள் இரண்டாம் அத்தியாயத்தில் பேசப்படுகின்றன மூன்றாவது அத்தியாயத்தில் விஷ்ணுமூர்த்தியால் இறைவனது நிருத்த மகிமையுணர்த்தப்பெற்ற ஆதிசேடன். அதனைக்காண அவாக்கொண்டு

[9-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்ப்புத் திருவிழா

# இருளை அகற்றிய பேரொளி

'கிறிஸ்து உயிர்த்துவிட்டார். நம் மீட்பின் சிலுவைப் பாதை அவரதுகல்லறையோடு முடிவுறவில்லை. அவ்வாறு முடிவுற்றிருந்தால் அவரது வாழ்வு மாபெரும் தோல்வியாக அமைந்திருக்கும். அவரை விசுவசிக்கும் நாமும் எல்லோரையும் விட இரங்குதற்குரியவராவோம்.' (கொரி- 15-29)' கிறிஸ்து உயிர்த்தெழ

அருட்திரு
மேரி பஸ்ரியன்

வில்லை என்றாலோ உங்கள் விசுவாசம் வீணானதே. நீங்கள் இன்னும் பாவநிலையிலேயே இருக்கிறீர்கள்.' (கொரி- 15-11) என்று புனித சின்னப்பர் கூறுகின்றார் இல்லை, மறைநூலில் உள்ளபடியே கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக இறந்தார். அடக்கம் செய்யப்பட்டு மறைநூலிலுள்ளபடியே மூன்றும் நாள் உயிர்த்தெழுந்தார். நம்மை இறைவனோடு ஒப்புரவாக்க உயிர்த்தெழுந்தார். ஆண்டவர் மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார். சாவிலிருந்து



வாழ்வுக்குக் கடந்துசென்றார் இதுவே பாஸ்கா விழாவாகும்.

கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் உயிர்த்தெழுந்த கிறிஸ்து தோன்றினார் என்பதை புனித சின்னப்பர் மிகவும்உறுதியாகப் பறைசாற்றுகின்றார். கிறிஸ்து தனக்குத்தோன்றித் தன்னை ஆட்கொண்டுவிட்டார்.

அதுவே போதும் தனக்கு அவரது வாழ்க்கையில் மகத்தான ஒரு திருப்பம் ஏற்பட்டு விட்டது. இதுவரை கிறிஸ்துவைப் பழித்து, கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியவருக்கு கிறிஸ்துவுக்காக எதையும் அனுபவிக்கத் துணிவைக் கொடுத்தது உயிர்த்த கிறிஸ்துவின் காட்சியாகும்.

நற்செய்தியாளர்கள் கல்லறை மீதிருந்த கல் புரட்டப்பட்டு கல்லறை காலியாக இருந்ததாகவும், பலருக்குக் காட்சி கொடுத்ததாகவும் குறிப்பிட்டு கிறிஸ்துவின் உயிர்ப்புக்குச் சான்றுபகர்கிறார்கள். ஆனால் புனித சின்னப்பரைப் பொறுத்தமட்டில் கிறிஸ்துவின் உயிர்ப்பு அவரது வாழ்க்கையில் மகத்தான மாற்றத்தை நிறைவேற்றியது அவரது வாழ்க்கையைப் பார்த்தே நாமும் முழுமனத்தோடு கிறிஸ்துவின் உயிர்ப்பை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறோம்.

உயிர்த்த கிறிஸ்து கொடுக்கும் மகிழ்ச்சி, நம்பிக்கை, மன்னிப்பு, சமாதானம், விசுவாசம், அதிகாரம் போன்ற நற்காரியங்கள் அப்போஸ்தலர் வாழ்க்கையில் மகத்தான திருப்பத்தை ஏற்படுத்தியது

எனவே ஆண்டுதோறும் கொண்டாடப்படும் உயிர்ப்புத்திருவிழா நம்வாழ்க்கையை அன்பிலும், மகிழ்ச்சியிலும், விசுவாசத்திலும் வளரச்செய்ய வேண்டும்.

பாவத்தை வென்ற கிறிஸ்துவின் உயிர்ப்பு, இருளை அகற்றிய பேரொளி எனது வாழ்விலும் ஒரு திருப்பம் ஏற்படுத்தாவிடில் என் விசுவாசம் பொருளற்றதே.

## கோயிலுக்குச் செல்லும்போது!

கோயில்என்பது புனித ஸ்தலம் அங்கே காமம், சூது, போட்டி, பொறாமை போன்ற தீய எண்ணங்களுக்கும், செயல்களுக்கும் இடமிருக்கலாகாது. பரிசுத்த மனதோடு மனதை ஒருநிலைப்படுத்தி இறைவழிபாடு செய்தல் வேண்டும் இது இன்றல்ல பாரம்பரியமாக செயல்முறையில் இருந்துவரும் கோட்பாடாகும்

ஆனால் இன்றைய நவநாகரீக விஞ்ஞான யுகத்தில் ஐம்புலன்களையும் ஒருநிலைபடுத்தி இறைவழிபாடு செய்வதென்பது இயலாத காரியமாக இருக்கின்றது. இன்றைய மங்கையர் சிலர் கோவிலுக்குச் செல்லும் போதும்கூட முழங்காலுக்கு மேல் சட்டை அணிகிறார்கள், தூரத்தில் வரும் பொழுதே யாரென்று திரும்பிப் பார்க்கவைக்கும் வகையில் வாசனைத்திரவியங்களைப் பூசுகின்றார்கள். இவையெல்லாம் ஐம்புலன்களையும் ஒருநிலைப்படுத்தி இறைவழிபாட்டில் ஈடுபடுவதைத் தடுப்பவையல்லவா?

சுவாமி வலம் வரும் பொழுது பக்திப்பாடல்களையோ அல்லது தேவாரங்களைபோதான் நாதஸ்வர வித்துவான்கள் நாதஸ்வரத்தில் வாசிக்க வேண்டும். சில நாதஸ்வரவித்துவான்கள் ஆபாசக்கருத்துக்கள் நிறைந்ததென்று தணிக்கைக்குழுவினரால் தடை செய்யப்பட்ட பாடல்களையும் சுவாமி வலத்தின்போது சுவாமிக்கு முன்னால் வாசித்துக்கொண்டு போகிறார்கள். இவைகளையெல்லாம் மாற்றி கோவிலுக்குச் செல்லும் பக்தர்கள் புனிதமாக வழிபடும் நிலையொன்று உருவாகவேண்டும்.

செல்வி பொ பட்டு
(கலைவிங்காடு)

## சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எம் பீ. இரண்டொரு 'வால்' களும் உள்ளே சென்றன.

அவனது முறை வந்தபோது அவன் எழுந்து உள்ளே சென்றான்.

அவன் வணக்கம் கூறினான் எம். பி. தலையசைத்து ஏற்றுக் கொண்டார்.

'என்ன வேணும்...இரும்...'

'வேலைவங்கி விசயமாய்— பாமசிஸ்ட் பயிற்சிக்கு என்னைச் சிபார்சுசெய்யுறதெண்டு சொன்னனீங்கள்...'

'ஓம் தம்பி — உம்மைதான் சிபார்சு செய்திருக்கிறன். யோசிக்காதையும்... உமக்குத்தான் கிடைக்கும்...நீர்தான் இந்தத்தொகுதியிலை மிகவும் திறம் றிசல்ற்...' முகம்மலர எம். பீ. சொன்னதும் அவனுக்கு உச்சி குளிர்ந்தது நன்றிகூறிவிட்டுவெளியே வந்தான். இந்த உலகம் அவனுக்கு இனியதாகத் தெரிந்தது.

பாதையின் மறுபக்கமிருந்த ஹோட்டலுக்குச் சென்று தேநீர் பருகினான். இனிமையான ஒரு [illegible] ஹம்' —ண்ணிக்கொண்டு பஸ் தரிப்புக்கு வந்தான். அங்கே பலர் நின்றனர். அழகான ஒரு பெண் அவனைப் பார்த்துச் சிரித்தாள். அவனும்சிரித்தான், ஏனோ மல்லிகாவின் நினைவு வந்தது.

'பேப்பர்...பேப்பர்'-பேப்பர் விற்கும் பையன் அவனருகே வந்தான். பத்திரிகை ஒன்றை வாங்கிப் புரட்டினான். தலையங்கம்-நாட்டின் அபிவிருத்தி. கீழே ஒரு மூலையில் அவசரகாலச் சட்ட அமுல் பற்றிய செய்தி- அவனுக்கு எதிலுமே அக்கறை இல்லை மறுமூலையிலே இருந்த தலைப்பு அவனை ஈர்த்தது என்ன...என்ன? அவன் பதறிபபடியே மீண்டும் வாசித்தான்—

'அரசாங்கக் கட்சியல்லாத மற்றைய எம்.பி.க்களால் வழங்கப்பட்ட வேலை வங்கிப் படிவங்கள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.'

இந்த உலகமே காலடியில் நழுவுவதாக உணர்ந்தான். மீண்டும் அந்தப் பெண் அவனைப் பார்த்துச் சிரித்தாள். இப்போது அவனுக்கு எதுவுமே தெரியவில்லை.

(யாவும் கற்பனை)

## யேசுபிரான் இதய கீதமே

கன்னத்திலே
அடித்து
கன்னத்தையும்
காட்டு
இன்னலுற்றும்
இதய
எண்ணியந்தத்
இதயம்

அடிபடினும்
கொள்ளாதே - மறு
காட்டுதற்குக்
கொள்வாயே
யேசுபிரான்
கீதமே - இதை
தன்மைவாழ
வேண்டுமே

அடித்தவனை
அடித்துக்
அடிபிடியின்
அழிவை
நடுநெறியே
நயக்கச்
தாடிவரும்
நலிந்து

அடக்குதற்கே
கொள்கிறார் - தொடர்
முடிவுருடி
யாக்குத்த
நமது வாழ்வை
செய்திடும் - நமை
சச்சரவும்
போய்விடும்

அப்பாவிக்குத்
அடித்துக்
எப்போதும் நற்
இணைத்துக்
தப்பாயெழும்
சண்டை
சாந்தமாகப்
சாந்தி

தப்பித்தவறி
கொள்ளாதே - வாழ்வில்
சமதர்மத்தை
கொள்வாயே
பேச்சைத்தூக்கிச்
செய்யாதே - தினம்
பேசிப் பேசி
கொள்வாயே

பொறுமைஇரக்கம்
புனிதன்
நிறைவு தரும்
நேசன்
அறிவு குறைவு
ஆக்கும்
ஆண்டவனே
வேண்டிக்

தாழ்ச்சியாவும்
போதமே - நல்ல
நீதிதருமம்
வேதமே
ஆயமனிதர்
கொடுமையை - நல்ல
மன்னியென்று
கொள்வாயே.

யேசுபிரான்
எத்தனையோ
நேசமான
நினைவுள்
மாசிலாத
கற்பனையே
மண்ணில் நல்ல
வாக்கி

பட்டயின்னல்
பார் - அவர்
போதனையை
வைத்தேசேர்
தேவசுதன்
கூர் - இந்த
வண்ணம் வாழும்
யமேதோர்

பாரமான
பார்க்கும்
பட்டதுன்பப்
படியும்
ஈரமற்ற
இன்னல்
யேசுபிரான்
ஏற்ற

சிலுவை தன்னைப்
போதிலே - யேசு
பாடு எல்லாம்
மனதிலே
யூதர் செய்த
தாங்கியும் - எங்கள்
இகபரத்தில்
முற்றூரே.

- கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை

## ஒரு திருத்தம்

16-3-80 'ஈழநாடு வாரமலரில்' "சீரான உணவை உட்கொள்ளுதல் ஆரோக்கியமான வாழ்விற்கு வழி வகுக்கும்' என்ற கட்டுரையில் காலையில் நல்லுணவையும், மதிய போசனமாக தேவைக்கேற்றளவு உணவையும், இரவில் திருப்தியான உணவையும் உட்கொள்ளுவதின்மூலம் எமது உடம்பை ஆரோக்கியமுள்ளதாகப் பாதுகாக்கமுடியும் என உள்ளது.

இதனைப் பின்வருமாறு திருத்தி வாசிக்கவும் காலையில் திருப்தியான உணவையும், மதிய போசனமாகப் போதுமானளவு உணவையும்,இரவுப் போசனத்தை மிகக்குறைவாகவும் உட்கொள்வதின்மூலம் எமது உடம்பை ஆரோக்கியமுள்ளதாகப் பாதுகாக்கமுடியும்.

## நடுவுநிலைமை

தனக்குவமை
தேடி
அலைந்த மனிதன்,
பாவம்...
தோற்றே விட்டான்;
தானீன்ற
தராசின் முன்
தலை கவிழ்ந்தான்!

- கண. மகேஸ்வரன் -

## குடா நாட்டு.....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளார். அதாவது மக்கள் புதிய பழக்கவழக்கங்களையும், புதிய போக்குகளையும் தேவைக்கும், காலத்துக்கும் ஏற்ப மாற்றிக் கொண்டேபோவார்கள் என்று குறிப்பிடுகிறார்கள். ஆனால் இப்பண்புகள் யாழ்ப்பாண மக்களிடம் இலகுவில் செல்வாக்குச் செலுத்தும் என்று சொல்லிவிடமுடியாது. ஏனெனில் மக்களின் கட்டுக்கோப்பான வாழ்க்கை முறை இதற்கெல்லாம் இலகுவில் நெகிழ்ந்துவிடாது.

இவ்வாறு பல அம்சங்களின் அடிப்படையில் நோக்குகின்ற போது யாழ் குடாநாட்டு மக்கள் இடம்பெயர்வதிலுள்ள பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளலாம்.

## கு. ப. ரா.வின் திறமை

ஆண், பெண் உறவைப் பற்றி நன்கு பரிசீலனை செய்தவர் கு. ப. ரா. பெண்களின் மனதுக்குள்ளே புகுந்து அங்குள்ள சஞ்சலங்களைத் ததும்பும் சித்திரங்களாகத் தந்திருக்கிறார். பாத்திரங்களின் பேச்சிலே கருத்தின் ஆழத்தையும் உணர்ச்சியின் வேகத்தையும் தெளிவாகக் காணலாம். ஆண், பெண் இருபாலார்களின் உள்ளங்களுக்குள்ளே புகுந்துகொண்டு அங்கு ஏற்படும் சிக்கல்கள், தாபங்கள், குறைகள், தவிப்புக்கள், பொருமல்கள் முதலியவைகளை நவரசமான காட்சிகளாகச் சித்தரித்துக் காட்டியிருக்கிறார் அவர்.

-ந. சிதம்பரசுப்பிரமணியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரில்லா அரக்கன்

## அத்தியாயம்-24

கொரில்லா அரக்கனின் உயிர் இருந்த பெட்டகத்தை எடுத்த வேலன் அதனைத் திறந்ததைக்கண்ட அரக்கன் பலமாகக் கூச்சலிட்டவாறு வேலனை நோக்கி ஆவேசமாகப் பாய்ந்தான்.

இதனைக் கண்டு வேலன் விரைந்து பெட்டியைத் திறந்தான். அப்போது அதிலிருந்த ஒரு வண்டு வெளிப்பட்டு பறந்தது. உடனே வேலன் தனது உடைவாளை உருவி அதனை ஒரே வெட்டில் வெட்டி வீழ்த்தினான்!

அப்போது அவ்விடமே அதிரும் வண்ணம் கத்திய கொரில்லா அரக்கன் உயிரிழந்தான்.

வி. சந்திரகுமார்

கொடிய கொரில்லா அரக்கன் வீழ்ந்ததும் எலும்புக்கூடுகளும், நச்சு ஜந்துக்களும் மனிதர்களாக மாறின.

மரஞ்செடிகள் காய்ந்துகருகி சூனியப் பிரதேசமாக காட்சியளித்த இடங்கள் அழகிய சோலைகளாக மாறின!

இவற்றையெல்லாம் பார்த்த வேலன், ஈசாப் குள்ளன், தீபா ஆகியோருக்குஆச்சரியம்தாங்க முடியவில்லை.

அப்பொழுது அவர்களை நோக்கிவந்த திடகாத்திரமான இளைஞன், 'வேலா, எம்மையெல்லாம் சுய உருவம்பெறச் செய்தாயே! உனக்கு எவ்வாறு கைமாறு செய்வது என்றே தெரியவில்லை!' என்ருன்!

வேலனுக்கு அது எங்கோ அடிக்கடி கேட்டுப்பழகிய குரல் போலத் தோன்றியது.

வேலனின் சந்தேகத்தை உணர்ந்த அந்த இளைஞன்... 'வேலா நான்தான் உனது வளர்ப்புக் கிளி' வேறு யாருமல்ல என்ருன். இதைக்கேட்ட வேலனுக்கு ஆச்சரியம் இரட்டிப்பாகியது.

'என்னது... நீயா? அப்படியாஞல் முன்பு...? என்ருன்.

'ஆம் வேலா! நான் இது வரைகாலமும் என்னைப்பற்றிய மர்மத்தை கூறவில்லை, இன்று கூறுகிறேன் கேள். நான் ராமமாபுர இளவரசன் இன்பராஜன். எனது தந்தையார் இராஜேந்திரர். அவர் கொடிய கொரில்லா அரக்கனின் அட்டூழியங்கள் தாங்காது அவன் மீது படையெடுத்துச்சென்று அவனின் தம்பி தீ அரக்கனை கொன்ருர். இதனல் கோபமுற்ற கொரில்லா அரக்கன் எனது தந்தையை ஒரு கற்பாறையாகவும் மக்களையெல்லாம் எலும்புக்கூடுகளாகவும் உருமாற்றிவிட்டான்! இதனை முன்பே நீ அறிந்திருப்பாய். அந்தச் சமயம் நான் அயல் நாட்டிற்கு விஜயம் செய்திருந்தேன். அதனல் அவனது மந்திரசக்தி என்னை அவ்வளவாகத் தாக்கவில்லை: நான் ஒரு பேசும் சக்தியுள்ள பச்சைக் கிளியாக உருமாற்றப்பட்டு... பின்னர் உன்னல் வளர்க்கப்பட்டேன். தற்போது உனது புண்ணியத்தால் நாமெல்லாம பழைய உருவைப்பெற்ருேம்' என்ருன்.

அப்போது அங்கே ராமமாபுர மன்னர் இராஜேந்திரர் வந்தார்.

'தந்தையே இவன்தான் வேலன். இவனின் அருளாலேயே நாம் மீண்டும் மனித உருவைப் பெற்ருேம். அத்துடன் இதுவரைகாலமும்இவனே என்னைவைத்துக் காப்பாற்றியவன்' என்று முழுக்கதையையும் தந்தையிடம் கூறினன் இன்பராஜன்

இராஜேந்திரர் வேலனைக் கட்டியணைத்து ஆனந்தக்கண்ணீர் மல்கி, 'வேலா உனக்கு நாங்கள் என்றும் கடமைப்பட்டவர்கள். உனது வீரமோ அளவில் அடங்கா. நீ எமது நாட்டில் சிறிது காலம் தங்கி இருக்கவேண்டுகிறேன்' என்ருர் அன்புடன்.

இதற்கு வேலன் 'அரசே மன்னிக்கவேண்டும் தற்போது நான் எமது நாட்டிற்கு அவசரமாகச் செல்லவேண்டியுள்ளது. பின்பு உங்கள் நாட்டிற்கு வருகிறேன் விடைகொடுங்கள்' என்ருன். அவர்களும் வேலன், ஈசாப்குள்ளன், தீபா ஆகிய மூவருக்கும் விடைகொடுத்து தக்க மரியாதையுடன் வழியனுப்பிவைத்தனர்.

வேனும், தீபாவும், ஈசாப்குள்ளனின் தங்க விமானத்தில் ஏறி ஒரு சில நிமிடங்களில் நாகதீபத்தின் அரண்மனையை அடைந்தனர்

கொடிய கொரில்லா அரக்கனைக் கொன்று இளவரசியை வேலன் மீட்டுவந்த செய்தி கேட்டு நாகதீப மக்கள் களிப்புடன் அரண்மனையை முற்றுகையிட்டனர்:

வேலனையும் தீபாவையும் கண்ட மக்கள் உவகைக் கடலில் மிதந்தனர்.

'வெற்றிவேலன் வாழ்க.'
'இளவரசி தீபா வாழ்க.'
'வீராதி வீரன் வேலன் வாழ்க.' எனப் பலவாறு மக்கள் எழுப்பிய கோஷம் வானைப்பிளந்தது.

அரசர் தீபராஜன் நீண்ட நாட்களின் பின்னர் தனது மகள் தீபாவைக் கண்டு அப்படியே பிரமித்து கற்சிலையானர்! அவரடைந்த மகிழ்ச்சிக்கோ அளவில்லை!

பின்பு அரசர் தீபராஜன துணிவும், வீரமும் முழு உருவாகக் கொண்ட வேலனைக் கட்டித்தழுவி ஆனந்தக்கண்ணீர் மல்கினர்.

வேலனின் வீரத்தைப் பாராட்டி அவனது துணிவை மெச்சினா

பின்னர் குறிப்பிட்ட நன்னளிலே பெரியோர் முன்னிலையில் நல்ல முகூர்த்தத்தில் வேலனுக்கும் இளவரசி தீபாவிற்கும் திருமணம் இனிதே நிறைவேறியது.

வேலனும் நாகதீப அரசனுகி செங்கோலாட்சி புரித்தான்

(முற்றும்)

### முன் கதைச் சுருக்கம்

நாகதீப அரசன் தீபராஜன். அவரின் ஒரே மகளான தீபாவை அவளுடைய கெடுகாலம் முடியும்வரை ஆஸ்தான சோதிடரின் யோசனைப்படி சுரங்கமாளிகையில் பாதுகாப்பாக வைக்கிருன்...ஆனல் கெடுகாலம் முடிவதற்கு ஒரு தினம் முன்னதாக கொரில்லா அரக்கன் மானுருவில் வந்து கடத்திச் சென்று யாராலும் அடையமுடியாத தனது மாயவெளி மாளிகையில் சிறைவைக்கிருன்.

இச்செய்தி கேட்டு தீபாவின் தாய் அரசியார் இறந்து போகிருர். மக்கள் சோகத்தில் மூழ்கின்றனர். தீபாவை மீட்பவர்களுக்கு நாட்டைத் தருவதாக அரசன் அறிவிக்கிருன். கொரில்லா அரக்கனின் பெயரைக்கேட்டு நடுங்கும் மக்கள் இதற்குத் துணியவில்லை. ஆனல் துணிவு மிக்க இளைஞன் வேலன் அரசரின் அனுமதியுடன் தீபாவை மீட்கப் புறப்படுகிருன்...

பல இன்னல்களைக் கடந்துசென்ற வேலன் வழியில் தீபராஜனின் தம்பியான நாகராஜனுடன் சமரிட்டு அவனைக் கொன்று மாயவெளிக் காட்டினுள் செல்கிருன்...

காட்டில் ஒரு எலும்புப்பேய் அவனை வழிமறிக்க வேலன் அதனை கொரில்லா அரக்கனென இரண்டுதடவை சந்தேகித்துத் தனது வாளால் வெட்டிச் சாய்க்கிருன் அது வேலனை சபித்துவிட்டு சாம்பலாகி மறைகிறது. தொடர்ந்து காட்டு வழியில திடீரென ஒரு பெரிய மரம் தோன்றி வேலனை இடைமறிக்க வேலன் அதுவும் கொரில்லா அரக்கனென நினைத்து அக்காட்டுத் தேவதையான 'தேவதாருமர' மரத்தை வாளால் வெட்ட அவன் செயலற்ற கற்சிலையாகிருன். தேவதையின் சாபத்தால்...

இதையறிந்த வேலனின் அருமை வளர்ப்புக் 'கிளி' சக்திவாய்ந்த குமாரமுனிவரின் ஆலோசனைப்படி மூன்று நாள் காலக்கெடுவினுள் இந்துசமுத்திரத்திலுள்ள திமிங்கில வயிற்றுத் தீவு அரசன் தேவகுமாரனின் கோவிலிலிருந்து அதிசய தைலத்தைப் பெற்றுவந்து வேலன் மீது கொட்ட வேலன் உயிர் பெறுகிருன். பின் காட்டுத் தேவதையிடம் மன்னிப்புக்கோரி முன்பு வழியில் சந்தித்த ஈசாப் குள்ளனின் உதவியுடன் எவராலும் அடையமுடியாத பயங்கர மாயவெளியிலுள்ள கொரில்லா அரக்கனின் மாளிகையை அடைகின்ருன். ஆனல் அரக்கனே ஈசாப்குள்ளனைக் கண்டு வெடிப்பெட்டியிலடைக்கிருன். ஆனல் வேலன் தனது தேவதையின் அதிசயப்புட்டியினல் ஈசாப்குள்ளனுக்கு உயிர் கொடுக்கிருன். பின்னர் இளவரசி தீபாவின் உதவியால் கொடிய அரக்கனின் உயிர்ப் பெட்டகம் உள்ள இடத்தை அறிந்து அங்கு செல்கின்றனர்... ஆனல் தனது உயிரை யாரோ களவாடுவதை உணர்ந்த கொடிய கொரில்லா அரககன் கோபாவேசங்கொள்கிருன்...]

---

## மாணவர் சிரிப்பு

கண்ணன்: முன் ஒரு காலத்தில் ஒரு தீப்பெட்டி ஒரு சதம் விற்றது... இப்ப ஒரு குச்சி ஒரு சதம்...

பாபு: எப்படி ஒரு பெட்டி இப்ப முப்பது சதமல்லவா?

கண்ணன்: ஒரு பெட்டியில் நாற்பது குச்சி. பத்துக் குச்சியில் மருந்தில்லை... சரியா... மீதி முப்பது குச்சியும் முப்பது சதம். அப்ப ஒரு குச்சி...?

கி. மதியழகன்
மட்டுவில் ம. வி.

---

## அழைக்கிறது மரவள்ளி!

அந்நியனிடம் மாவை
வாங்கி
அறுசுவை உணவு தேடி
அருமையாய் சுவைத்த
மனிதா
அழகிய எந்தன்
கதையை
அமைதியாய்
கேளுமையா.

கோதுமை ஏற்றிக்
கப்பல்
வருவது எப்போ?என்று
காத்துமேயிருந்து நீயும்
காலத்தை வீணுக்காது

மாவள்ளி என்றஎன்னை
மனதுடன்
பயிரிட்டாயேல்
அறுசுவை உணவு தேட
அருமையாய் உதவு
வேன் யான்

கோதுமை மா எமக்கு
கொடுத்துமே வந்த
நாட்டார்
கொடுப்பதை நிறுத்திக்
கொண்டால்
கொடும்பசி உனை
வாட்டும்

அறிவுடை மனிதா
ஆறியே இருந்திடாது
மாவள்ளி என்ற என்னை
மனதுடன் பயிரிட்டா
யேல்
பஞ்சமும் பசியுமெல்
லாம்
பறந்திட வளம்
கொஞ்சாதோ!

மு. தங்கத்துரை
திருஇருதயக்கல்லூரி,
கரவெட்டி

---

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

---

## ஹௌ இஸ் தட்?

அம்பயர்

மா. மகேந்திரன்
அடம்பன் ம. வி.

கேள்வி: ஒரு கிரிக்கட் பந்தின் நிறை எவ்வளவு?

பதில்: 5½ அவுன்ஸிற்கும் 5¾ அவுன்ஸிற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

●

பி. சத்தியேந்திரன்
மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை.

கேள்வி: தனியொருவர் பெற்ற ஆகக் கூடிய ஓட்டங்கள் எத்தனை.

பதில்: டெஸ்டில் மேற்கிந்தியாவைச் சேர்ந்த சேர் ஹரி சோபர்ஸ் ஆட்டமிழக்காது 365 ஓட்டங்களைப் பெற்ருர். முதல்தர ஆட்டத்தல் பாகிஸ்தானைச் சேர்ந்த கனிவ் முகமட் 499 ஓட்டங்களைப் பெற்ருர்.

●

ச. யோகராசா
மட்/களுதாவளை ம. வி.

கேள்வி: அதிக டெஸ்டுகளில் காப்டனுக பணியாற்றியவர் யார்?

பதில்: இங்கிலாந்தைச் சேர்ந்த பீற்றர் மே என்பவர் 41 டெஸ்டிலும், இந்தியாவைச் சேர்ந்த பட்டோடி நவாப் 40 டெஸ்டிலும் பணியாற்றியுள்ளனர்.

●

என். பிரபாகரன்
விக்ரோரியாக் கல்லூரி
சுழிபுரம்.

கே: டெஸ்டில் அதிக செஞ்சரிகள் அடித்தவர் யார்?

ப: ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சேர் டொனல்ட் பிராட்மன் 29 செஞ்சரிகளைப் பெற்றுள்ளார்.

●

கே. ரமேஸ்
கொக்குவில் இந்துக் கல்லூரி

கே. டெஸ்டில் ஆகக்கூடிய ஓட்டங்களைப் பெற்றவர் யார்?

ப. [illegible] சேர்ந்த சேர் ஹரி சோபர்ஸ் 8032 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

கே. ஆகக் கூடுதலான டெஸ்ட் பந்தயங்களில் விளையாடியவர் யார்?

ப. கொலின் கவுட்ரி (இங்கிலாந்து) 101 டெஸ்ட் விளையாடியுள்ளார்.

●

ம. மணிசேகர்
மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை.

கே கிரிக்கட் டெஸ்ட் விளையாடும் நாடுகளையும் அதன் கப்டன்களையும் கூற முடியுமா?

ப 1. மேற்கிந்தியா - கிளைவ் லோயிட், 2. ஆஸ்திரேலியா - கிரெய்க் சப்பல், 3. இங்கிலாந்து - மைக் பியர்லி, 4. இந்தியா- விஸ்வநாத், 5. பாகிஸ்தான் - ஜாவட் மியன்டாட், 6. நியூசிலாந்து - ஹோவாத்

●

ஆர். சுப்பிரமணியம்
நெல்லியடி ம. வி.

கே. உங்களுக்குப் பிடித்த 5 சிறந்த ஆட்டக்காரர்களை வரிசைக் கிரமமாகக் கூறுங்கள்.

ப. 1. விவியன் றிச்சாட்ஸ், 2. கிரெய்க் சப்பல், 3 சுனில் கவாஸ்கார், 4 போய்க்கொட், 5. இயன் போதம்

●

வி மனோகரன்
சென்ஜோன்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்.

கே. உலகக் கிரிக்கட் குழு ஒன்றைத் தெரிவு செய்யுமாறு உங்களைக் கேட்டுக் கொண்டால் யார் யாரைத் தெரிவு செய்வீர்கள்?

ப. 1 சுனில் கவாஸ்கார் [இந்தியா] 2. போய்கொட் [இங்கிலாந்து] விவியன் றிச்சாட்ஸ் [மே-இந்திபஸ் 4. கிரெய்க் சப்பல் [ஆட்திரேலியா] 5. ஜாவா) மியன்டாட் [பாகிஸ்தான்] 6 இயன் போதம் [இங்கிலாந்து] 7. பொப் ரெயிலர் [இங்கிலாந்து] 8 அஷ்லி மலற் [ஆஸ்திரேலியா] 9. அன்டி ரொபேட்ஸ் [மே-இந்தியா] 10. டெனிஸ் லில்லி [ஆஸ்திரேலியா] 11. ஜொயில் காணர் [மே-இந்தியா] 12-வது ஆட்டக்காரர் றிச்சாட் ஹட்லி [நியூசிலாந்து]

●

வி. சந்திரகுமார்
யாழ். மத்திய கல்லூரி

கே. கிரிக்கட்டை வாழ்க்கையுடன் ஒப்பிடுங்கள்?

ப. இரண்டிலும் ஒரு முறை தவறிவிட்டால்...?

●

த. குமரேஸ்வரன்
யாழ். மத்திய கல்லூரி

கே, சென்றல் - சென்ஜோன்ஸ் வருடாந்தப் போட்டியில் ஏதாவது ஒரு கோஷ்டி வெற்றிபெற வழி என்ன?

ப. ஆட்ட நேரத்தை மூன்று நாட்களாக அதிகரிக்கலாம். அண்மையில் நடைபெற்ற றோயல் - தொமியன் வருடாந்தப் போட்டி மூன்று நாட்கள் விளையாடிய போதிலும் வெற்றி தோல்வி இன்றியே முடிவடைந்தது என்பதும்குறிப்பிடத்தக்கது.

(கடந்த வாரம் கிரிக்கட் ஸ்பெஷலில் வெளிவர வேண்டிய இப்பகுதி இட நெருக்கடி காரணமாக பிரசுரிக்க முடியவில்லை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
நாகேஷ்-சௌகார்ஜானகி
நீர்க்குமிழி
(புதிய பிரதி)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஹலோ மிஸ்டர்
ஜமீந்தார்
(புதிய பிரதி)

—LAST FEW D S ONLY—
SANTHI JAFFNA — Phone: 7642.
Daily 10-30 a.m, 2-30, 4-45, 7-00 & 9-30 p. m.
"SPECIAL DELIVERY"
ADULTS! ACTION PACKED!! COLOR!!!
Await! "DIAMOND'S"—in color

4th CROWD WEEK
REGAL JAFFNA Phone: 360
Daily 4 shous
Daily at a m. 2-00, 4-30, 7-00 & 9-30 p.m.
ROGER MOORE as JAMES BOND
LIVE AND LET DIE
(More suited for Adults)

ராஜா - (யாழ்நகர்) கடைசி வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-கவிதா-சந்திரமோகன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். -ஜெயலலிதா
தனிப்பிறவி (புதிய பிரதி)

வின்ஸர் தொலைபேசி: 466
(யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7.15, 10-00
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) 10-4-80 வரை மட்டு
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-கே. ஆர். விஜயா, சுந்தரராஜன்
நடித்த
திருடன் (புதிய பிரதி)
11-4-80 முதல் புத்தாண்டு வெளியீடு:
இரத்தத்தின் இரத்தமே (ஈஸ்மன் கலர்)

வெலிங்டன் Daily 10-30 a. m., 2-30, 4-15, 7-00, & 9-30 p.m.
[யாழ்ப்பாணம்]
Horror of Franken n
[Strictly for Adults]

லிடோ தினசரி 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
(யாழ். நகர்) பேசன்:
சுபதி ம்

# நமது நூல்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கயிலாயமலைச் சாரலையடைந்து தவஞ்செய்ய, சிவபிரான் வெளிப்பட்டு அவ்விடத்தே யன்றித் தில்லைவனத்தில் தானே திருநடன தரிசனம் கிட்டுமென உரைத்தனள. அவர் பணித்தவாறே முன்னைய பதஞ்சலி வடிவுபெற்று அங்கு சென்று வியாக்கிர பாதர், முதலாம் முனிவர்களுடனும், ஏலவே தாண்டவ தரிசனம்வேண்டி வந்துறையும் தில்லை மூவாயிரவரோடும் சேர்ந்து இருந்த செய்தியை அறிகின்றும். நடராஜ திருத்தத்துவம் நான்காம் அத்தியாயத்தில் விளக்கம்பெறுகிறது. வியாக்கிரபாதர் பதஞ்சலி முதலானோரும் தில்லை மூவாயிரவரும் கண்டு தரிசிக்கும் வண்ணமாக இறைவன் சிதம்பரத்திலே தைப் பூசத் தினத்து நடுப்பகலிலே நடன தரிசனம் அருளினர். அவ்வற்புதக் காட்சியைக்கண்ட முனிவர்கள் தெவ்வானந்த நர்த்தனத்தை எக்காலமும் ஆன்மாக்களுக்குப் புலப்படுத்தருளவேண்டுமென வேண்டிக்கொள்ள இறைவனும் இசைந்தருளினார்.

இக்கட்டத்திலே உருவமில்லாத இறைவன். உயிர்களுக்கு இரங்கி அவரவர் பக்குவத்திற்கேற்பஉருவத் திருமேனிகொள்ளும் உண்மை விளக்கப்படுகிறது. நடராஜர் முதலிய வடிவங்கள் பக்குவர்களாற்காணப் பட்டவைகள். எவ்வாறெனில் பதஞ்சலியும், புலியும், பஞ்ச கிருத்தியநடனத்தைச் சிதம்பரத்தில் கண்டவாறே தம் இதயக் கமலங்களிலும்ஆனந்த நடனங்கண்டவர்கள் அவ்வாறே பக்குவம் உடையாரும் காணவல்லார்கள். இதனை 'தெய்வ வடிவங்களைக் காணத் தக்கவர்கள் காணக்கூடிய சமயங்களில் காணாமலிருந்து கொள்ளமாட்டார்கள்' என பண்டிதமணி குறிப்பிடும்போது அவர் விளக்க எடுக்கும் கருத்தை, உரைக்கச் சொல்லும் ஆற்றல் பளிச்சிடுவதைப் (மனம் வைத்து) படிப்பவர் இலகுவில் புரிந்துகொள்வர். நடக்கமாலை பிறிதோர் சார்பு பற்றிய பொருள் பிரகாசிப்பது எனத் தடத்த விலக்கணத்துக்குத் தந்துள்ள விளக்கத்தை நோக்கும்போது இத்தகைய விளக்கம் தருவார் இல்லாமையால்தான் இன்று நமது சமயக் கல்வி அவதியுறுகிறது என்ற ஏக்கம் மனத்தில் எழுகின்றது.

தெய்வ வடிவங்களில் கண்டு களிக்கவேண்டியவைகளைக் காணமுடியாதநார், அத் தெய்வ வடிவங்களை மனித ஓவியங்களோடு ஒப்பிட்டு வியந்து பரவசப்படுவது கேத்திர கணிதக்கிறுகளைக் கணித மணமப் இல்லாதவன் கண்டு ஆனந்தப்படுவதற்குச் சமமாயிருக்கும்! என்று இறைகூற்ற வடிவங்களில் தெய்வ சாந்நித்தியத்தைக் காணாது கலையழகைக் கண்டு களி (ப்புத கப்பாவி)க்குப சில மாந்தரச் சாடுவதாயுள்ளதோடு பிறர் எவரும் பின்பற்ற முடியாத சுயமுத்திரை பொறித்த மொழி லாவண்ணியத்தையும் புலப்படுத்தி நிற்கின்றது இத்தகைய வாக்கியங்கள் அநேகமானகக் காணப் படுவனவேயன்றி நூல் முழுமையும் சாதாரணமானவர்களும் இலகுவாகப் படித்துணரக்கூடிய இலகு நடையில் அமைந்துள்ளது.

நூலின் ஐந்தாம், ஆறும் அத்தியாயங்களில் நடேசப் பெருமானுக்கு திருவம்பலமும் திருமூலட்டானேசுரர்க்கு திருக்கோயிலும், தில்லைமூவாயிரவர்க்கு திரும ளிகைகளும் கட்டிச் சிறப்புச்செய்த சோழ மன்னன் வரவாறும், தில்லைவாழந்தணர் பெருமையும் பேசப்படுகின்றன.

விசேடதானங்களில் கோயில்கள் உண்டாகின்றன. அதன் திருப்பணியும் அவன் திருவருளால் சித்திக்கின்றது. புண்ணியத் தெரிந்தவர்கள் அதனைச் செய்யக்கடவர்கள். அதனை விரும்புகிறவர்கள் வலிந்து வந்து சேருவர்கள். புண்ணியஞ்செய்யுங்கூட்டம் சேர்க்கப்படுவதில்லை. சேர்க்கத்தொடங்கினுல் ஒரு குடம் பாலை ஒரு துளி மது கெடுத்துவிடும் என்ற மணி வார்த்தைகளைச் சிகரமாகக் கொண்டு கோயில் நிறைவு பெறுகிறது. இவ்வார்த்தைகளை மனத்திற்கொண்டு இன்று சில கோயில்களில் நடைபெறும் திருப்பணிப் பாங்கையும், அதனை நடத்துவார் இயல்பையும் நோக்குங்கால அக்கோயில்கள் அருள் ஒளி இழந்து காணப்படுவதற்குரிய காரணம் புலனாகும்.

'ஆனந்ததேன் பொந்து' என்று சிதம்பரத்தை ஓர் அருட் கவிஞர் பாராட்டியுள்ளார் அந்த வார்த்தை இந்நூலுக்கு ஏற்புடையது. கோயில் என்பது யோகரூடியாகச் சிதம்பரத்தைக் குறிப்பது' பண்டிதமணி என்பது சி. கணபதிப் பிள்ளை அவர்களுக்கு அமைந்த யோகரூடி கோயிற் கூத்தன் ஈழத்திலே சைவம் வளர்க்கும் காரணமாக இட்டுவைத்த குறியே (குறி-வடிவம்) பண்டிதமணி.

வ. சிவராஜசிங்கம்
(மொழி இலாகா, கொழும்பு)

நாகம்ஸ் (மன்னுகம்)
தினசரி 6-40, 9-40
சனி, ஞாயிறு 6-45
ரங்கராவ் - சுந்தரராஜன்
அன்புச் சகோதரர்கள்
(புதிய பிரதி)

# ஜனுதிபதியை சந்திப்பர்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தை முன்னைய அரச கூட்டுறவுச் சந்தைப் படுத்துப் சம்மேளனத்துடன் இணைந்து விட்டதை புனரமைக்க வேண்டுமென, அரசாங்கத்தை கேட்கும் முகமாக ஜனுதிபதியை நேரில் சந்திப்பதற்கு, வடமாகாண கூட்டுறவாளர் உயர்மட்டக்குழு இம்மாதம் கொழும்பு செல்வுள்ளது.

# வீதி திருத்த நடவடிக்கை

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை பட்டின சபை எல்லைக்குள் பல ஆண்டுகளாகத் திருத்தப்படாமல், போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கும் வீதிகளை செப்பனிடுமாறு பட்டின சபை விசேட ஆணையாளர் திரு. க. சண்முகநாதன் பொதுமராமத்துப் பகுதியினரிடம் கோரியுள்ளார்.

காங்கேசன்துறைப் பட்டின சபை எல்லைக்குள் உள்ள காட்டைப்புலம், சந்தைவீதி, 1, 2ம், 3ம் ஒழுங்கு வீதிகள் ஆகியவற்றையே செப்பனிடுமாறு அவர் கோரியுள்ளார்.

இவ்வீதிகள் குண்டும் குழியுமாக இருப்பதால் பொதுமக்கள் போக்குவரத்துக்கு பெரிதும் கஷ்டப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இன்று வருடாந்தக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க பொது சேவை தொழிலாளர் சங்க 31-வது ஆண்டு நிறைவு வருடாந்த பொதுக்கூட்டம், யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் இன்று காலை நடைபெறவிருக்கிறது.

யாழ். கிளைத் தலைவர் திரு. க. செல்லத்துரை, கல்விக் கிளைத் தலைவர் திரு. க. நவரத்தினம் ஆகியோரின் கூட்டுத்தலைமையில் கூட்டம் நடைபெறும். (ச)

கட்டிடம் விற்பனைக்கு

திருகோணமலைத் துறைமுகத்திற்கு அண்மையில் சுமார் ஒன்றரை ஏக்கர் காணியில் அமைந்த இரும்புக் கேடர்களும் அஸ்பெஸ்டஸ் ஷீட்டாலும் வேயப்பட்ட காங்கிரீட் ஸ்டோர் கட்டிடம் விற்பனைக்குண்டு. 203 அடி நீளம், 60 அடி அகலம் 23 அடி உயரம் கொண்ட இக்கட்டிடம் உல்லாச பிரயாண ஹோட்டல்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் உகந்தது. பங்குதாரராகச் சேர்ந்து தொழில் நடத்த விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்

உரிமையாளர்
வீ. தனிகாசலம்
178, கஸ்டம்ஸ் வீதி,
திருகோணமலை.
5404

ராணி - யாழ்நகர்
தினசரி 4 காட்சிகள்
✶ ஸ்ரீகாந்த் ✶ மலேசியா சிவாஜி ராஜா ✶ டீன்குமார்
✶ கலைச்செல்வன் ✶ ஜவாஹர் ✶ ஜோபுநஸீர்
✶ ரகுநாதன் ✶ பரிஞலே ✶ ஹெலன்குமாரி ✶ சந்திரகலா
மற்றும் ஈழத்து நடிகர்கள் பலர் ஒன்றுகூடி நடித்த
நெஞ்சுக்கு நீதி
இது ஒரு இலங்கை - இந்திய - மலேசிய கூட்டுத் தயாரிப்பு

சுத்தமான
மரவள்ளி மா

சுகாதார முறைப்படி சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட மண், மணல் சற்றும் இல்லாத மரவள்ளி மா எங்களிடம் விற்பனைக்கு உண்டு.

பிட்டு, இடியப்பம், ரொட்டி முதலியவை தயாரிப்பதற்கு மிகவும் உகந்தது. கோதுமை மா பாவிப்பதுபோலவே பாவிக்கலாம். ஒருமுறை வாங்கிப் பாவித்துப்பாருங்கள்.

ஒரு இருத்தல் பைகளில் உண்டு.
விலை இருத்தல் ரூபா 1-50 மட்டுமே
100 இருத்தலுக்கு மேல் வாங்குபவர்களுக்கு 10% கழிவு கொடுக்கப்படும்.

தயாரிப்பாளர்:-
அரஸ்கோ இண்டஸ்றீஸ்
பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7051

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேஷ

## மலிவு விற்பனை

Y.K.K. சிட்ஸ் எல்லா அளவுகளும் கைலேஞ்சிகள் - சுவிம்மிங் கோர்ஸ் சொப்பிங் பேக்ஸ் - பப்பி - இறக்குமதி பட்டன்கள் - சைனு நூல் 500 யார் - லேடன் தயாரிப்புகள் - கோல்டன் பிறசியர்கள் - பொலியஸ்டர் வகைகள்.

வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு

**சீக்கோ டிறேடர்ஸ்**

43, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.


## ஊழியர் மன்ற உறுப்பினர்கள் ஏமாற்றம்?

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்மன்றங்களின் தலைவர்கள், உபதலைவர்கள், உறுப்பினர்களை நேற்றுக்காலை யாழ் பொது நூல்நிலைய மண்டபத்தில் நடைபெற இருந்த கூட்டத்திற்கு வருமாறு அழைத்த வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு டட்லி குணசேகரா தலைவர்களையும் உபதலைவர்களையும் நேற்றுக்காலை 4-ம் குறுக்குத்தெருவிலுள்ள தமது அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று இரகசியமாகக் கூட்டம் நடத்ினுராம்.

காலை சுமார் 8-30 மணி முதல் பகல் 12 மணி வரை நூல் நிலைய மண்டபத்தில் காத்திருந்து ஏமாற்றமடைந்த மன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்ருலும் அதில் கலந்துகொள்வதில்லை என்று முடிவுசெய்துவிட்டு அங்கிருந்து திரும்பிவிட்டனராம்.

வழியில் ஓர் அதிகாரி கூட்டத்திற்கு மீண்டும் வருமாறு அழைத்திருந்த போதிலும் தாம் அவரது அழைப்பை நிராகரித்துவிட்டதாக உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (இ)


**NEW CAMBRIDGE**

திருநெல்வேலிச் சந்தி

5-5-80ல் ஆரம்பம்

G. C. E. (A/L) 81, 82

தாவரவியல்:திரு. சிவவீரசிங்கம்

விலங்கியல்:பிரபல ஆசிரியை

இரசாயனம்

திரு. சண்முகதாஸ் (கண்ணன்)

பௌதிகம்: பிரபல ஆசிரியர்

தூயகணிதம்-பிரயோக கணிதம்

பிரபல ஆசிரியர்

மேலதிக விபரங்கட்கு:

V. M. PACKKIYANATHAN.


தமிழ் மக்கள் பிரச்னையைத் தீர்த்து வைக்க

# இந்த அரசால் முடியாவிடில்

## வேறு எந்த அரசாலும் முடியாதாம்

### கனகசூரியர் கூறுகிருர்

(யாழ்ப்பாணம்)

'ஜயவர்த்தன அரசாங்கத்தில்தான் தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்கும். இந்த அரசாங்கத்தில் தமிழ் மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படாவிட்டால் வேறு ஒருவராலும் நம்முடைய பிரச்னைகள் தீர்க்கப்படமாட்டா.'

இவ்வாறு பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவரும் தேசிய சேவை மன்ற இயக்குநருமாகிய திரு. என். கனகசூரியர் கிளிநொச்சித் தொகுதியில் உள்ள பல்லவராயன்கட்டு விளையாட்டு மைதானத்தில் நடந்த கலைவிழாவில் கலந்துகொண்டு பேசிகையில் தெரிவித்தார். திரு கனகசூரியர் தொடர்ந்து பேசுகையில் 'வடமாகாணத்தில் சிறு கைத்தொழில்கள் பலவற்றை உண்டாக்கி தமிழ் மக்களின் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கவேண்டும், தமிழரின் கீழ்த்தர நிலைக்கு முக்கிய காரணம் பொருளாதார வளர்ச்சியின்மையே. வடமாகாணஅரசியல் தலைவர்கள் மக்களின் பொருளாதார வளர்ச்சியில் மிக்க அக்கறை கொள்ளவேண்டும். யாழ்ப்பாண மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு மகாதேவாப் பாலம் அமைத்தல் மிகமுக்கியமாகும். தமிழ்த் தலைவர்கள் இதில் அக்கறை காட்டாதது மிகவும் வருந்தத்தக்க விஷயம். மகாதேவாப் பால அமைத்தல் வேலைகளை ஆரம்பிக்க தலைவர்கள் முன்வரவேண்டும். பல நாசவேலைகளில் ஈடுபடும் சில தமிழ் இளைஞர்களின் கவனத்தையும் பலத்தையும் இந்த மகாதேவாப் பாலத்தைக் கட்டும் வேலைகளில் திசைதிருப்பி நமக்கு நல்ல ஆக்கபூர்வமான வேலைகளைச் செய்ய அவர்களை உபயோகிக்கவேண்டும். தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்திசெய்ய அரசாங்கத்தை மாத்திரம் எதிர்பார்த்து இருக்கக்கூடாது' என்றும் குறிப்பிட்டார்.

திரு. கனகசூரியர் தொடர்ந்து பேசுகையில் நாட்டு அபிவிருத்தியில் முக்கிய பங்கை எடுப்பவர்கள் இளைஞர்களே. அவர்கள் சோர்வடையாது நம் நாட்டைக் கட்டி எழுப்ப அல்லும் பகலும் அயராது உழைக்க வேண்டும். ஜயவர்த்தன அரசாங்கம் இருக்கும்போது நமக்கு வேண்டியவற்றையெல்லாம் பெற்றுக்கொள்ளவேண்டும். நாம்போடும் ஒவ்வொரு அபிவிருத்தித் திட்டங்களையும் வெகுவிரைவில் செய்துமுடிக்க வேண்டும். வடமாகாணத்தில் வேலைசெய்யும் அரசாங்க ஊழியர்கள் அவர்களின் கடமைகளைத் திறம்படச்செய்வதில்லை. கொழும்பு ஆகிய பிற ஊர்களில் தமிழ் ஊழியர்கள் மிகவும் கடமை மனப்பான்மையோடும் வேகமாகவும் அரச கடமையில் ஈடுபடுகிருர்கள். ஆனால் அவர்கள் தங்களின் நாட்டுக்கு மாற்றலாகிச் சென்றபின் கடமைகளில் ஒருவிதமான அக்கறையில்லாமல் அபிவிருத்தி வேலைகளுக்கு உதவி செய்யாமல் முட்டுக்கட்டைகளாக இருக்கிருர்கள். வடமாகாணத்தில் வேலைசெய்யும் ஒவ்வொரு ஊழியரும் தமக்குக் கிடைத்த பெரும் வாய்ப்பை உணர்ந்து அபிவிருத்திக்கு ஊக்கம் அளித்துப் பணிபுரிந்தால் தமிழ் மக்களுக்கு இருக்கும் எத்தனையோ பிரச்னைகள் தீர்ந்துபோகும் என்றும் திரு. கனகசூரியர் தெரிவித்தார்.

கூட்டத்துக்கு பிரதம விருந்தினராக உரையாற்றிய கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆனந்தசங்கரி பேசுகையில், வடமாகாண அபிவிருத்தி வேலைகளில் திரு. கனகசூரியர் பங்கு எடுப்பது போல் ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும். திரு கனகசூரியரும் நானும் அரசியலில் வேறுபட்ட கொள்கைகளை வைத்திருந்தபோதிலும் தமிழ் மக்களுக்கு கனகசூரியர் ஆற்றும் தொண்டை நாம் ஒவ்வொருவரும் பாராட்டாமல் இருக்கமுடியாது. தமிழ் மக்களின் பொருளாதார அபிவிருத்திவேலைகளுக்கு திரு. கனகசூரியர் எடுக்கும் ஒவ்வொரு திட்டங்களுக்கும் நாம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கின்றேம் என்ருர். யாழ். மாவட்ட தேசிய இளைஞர் மன்ற அதிகாரி திரு ஏ. நீலகண்டன், திரு. எஸ் ஆறுமுகம் ஆகியோரும் பேசினர்.


### விற்பனைக்கு

ஜப்பானில் இருந்து புதிதாக் கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட நல்ல நிலைமையில் உள்ள ஹொண்டா (Honda) CB 350 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. சாந்தி ரயர் வேக்ஸ்' 218/2, முனீஸ்வரர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8085' (5418)


### விரைவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பணங்களையும் இப்பிரிவின் மூலம் மாற்றமுடியும்.

**6 வங்கிக்கிளைகள் நாளை திறப்பு**

பயங்கரவாதத்தை அடுத்து வடபகுதியில் மூடப்பட்ட 11 மக்கள் வங்கிக் கிளைகளில் 6 வங்கிக் கிளைகள் மீண்டும் நாளை திங்கட்கிழமை திறந்து வைக்கப்படுகிறது.

மூடப்பட்ட யாழ். நவீன சந்தை, நல்லூர், நெல்லியடி, புத்தூர் கிளைகள் இம்மாத இறுதிக்குள் மீண்டும் திறக்கப்படும் இதுதவிர வடபகுதியில் இன்னும் பல மக்கள் வங்கிக் கிளைகளும் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

மீனவர்களின் நன்மைகருதி கரையோரப்பகுதிகளிலும் சில வங்கிகள் ஆரம்பிக்கப்படவுள் 'மீனவர்களுக்கும், கைத்தொழிலாளர்களுக்கும் கடன் வழங்குவதற்காக ஒவ்வொரு வங்கிக்கிளைகளிலும் தனியான ஒரு பிரிவு அமைக்கப்படவுள்ளன.

**மீனவர்களுக்கு ரூ. 3 கோடி ஒதுக்கீடு**

மீனவர்களுக்குக்கடன் வழங்குவதற்காக 3 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 700 மீனவர்களுக்கு கடன் வழங்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வள்ளங்கள், வலைகள், இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்குமாக இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. (கொ-இ)


## மரண அறிவித்தல்

### விஸ்வலிங்கம் பொன்னுத்துரை

உடுவில் மேற்கைச் சேர்ந்த சோதிடர் விஸ்வலிங்கம் பொன்னுத்துரை காலமாஞர். ஓய்வுபெற்ற இ.போ.ச கணக்காளரான இவர் நாகம்மாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற பாக்கியம், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், வேலாயுதபிள்ளை. காலஞ்சென்ற கந்தையா ஆகியோரின் மைத்துணரும், சிவபாதசுந்தரம், பாலசுப்பிரமணியம், இராசபூபதி, கதிர்காமநாதன், யோகநாதன், சுந்தரலிங்கம், இரத்தினசிங்கம், நிர்மலர், கெங்காதரன், பரமசிவம், மீனலோஜினி, யோகேஸ்வரி, நகுலேஸ்வரன் ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பூவோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் 5417


## "இன்றைய காலகட்டத்தில் யேசுவின் போதனைகள் அவசியமாகின்றன"

...யாழ். ஆயர்

(மாவிட்டபுரம்)

"மக்களது குறிக்கோள்கள், நடைமுறைகள், பண்பாடுகள் மாறிவருகின்ற இன்றைய காலகட்டத்திலே யேசுவின் வாழ்க்கையிலிருந்து நாம் பல பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டிய நிலையிலிருக்கின்றேம்."

இவ்வாறு காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக் கத்தோலிக்க சங்கத்தினுல் தொழிற்சாலை மைதானத்தில் நடத்தப்பட்ட 'பலிக்களம்' என்னும் யேசுவின் வரலாற்றைச் சித்தரிக்கும் நாடகத்தை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்துப் பேசிய யாழ் ஆயர் அதிவந். தியோகுப்பிள்ளை ஆண்டகை கூறினுர்.

யாழ் திருமறைக் கலாமன்றத்தினர் தயாரித்தளித்த மேற்படி நாடகம் 200 அடி நீளமான மேடையில் ஒளி அமைப்புக்களுடன் இயற்கையான காட்சிகளைப் பார்ப்பது போன்று இடம்பெற்றது.

பல பகுதிகளிலிருந்தும் கிறிஸ்தவ மக்கள் பெருந்திரளாக வந்திருந்த இந்நிகழ்ச்சியில், யாழ் ஆயர் மேலும் பேசும்போது கூறியதாவது:

"இன்றைய உலகுக்கு யேசுவின் வழிகாட்டல்கள் மிகவும் உதவியளிக்கக்கூடியன. அவரது பணிகள், குணநிசயங்கள் பற்றி நாம் இன்னும் கூடச் சரியாக அறியாமலிருக்கிறேம். இறைவனது ஒளியாக அவதரித்த யேசு அன்பு, இரக்கம் என்பவற்றையே மிகவும் கண்டிப்பாகப் பின்பற்றினுர். அவரது பணிகளை அறிந்து, அவர் வழி வாழ இப்படியான நிகழ்ச்சிகள் உதவுகின்றன."

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. மேவின் பெரேண்டோ உட்படப் பலர் பேசினர். (அ)

## வறுமைதாங்க முடியவில்லை தொழிலாளி விபரீத முடிவு

(புலோலி)

வறுமையைத் தாங்கமுடியாத கூலித்தொழிலாளி ஒருவர் மனைவியின் சேலையால் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

புலோலி தெற்கைச் சேர்ந்த கோவிந்தபிள்ளை தங்கராசா (வயது 33) என்பவரே வறுமை தாங்கமுடியாமல் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டவராவார். இவரது மரண விசாரணையின் போது மனைவி பாறுபதி (வயது 27) சாட்சியமளிக்கையில், கூறியதாவது.

இறந்தவர் எனது கணவர், எங்களுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றுர்கள். அவர் தோட்டம் செய்வதுடன் கூலிவேலையும் செய்து வந்தார். எங்களது வீடு கடந்த சில வருடங்களுக்கு முன்னர் எரிந்தது. தற்போது இந்தச் சிறிய வீட்டிலேயே வசித்து வருகிறேம். இறந்த எனது கணவர் மது அருந்தும் பழக்கமுடையவர். ஆனல் மது மயக்கத்தினுல் தன்பாட்டில் புலம்பிக் கொண்டிருப்பாரே தவிர, என்னேடு சண்டை பிடிப்பது கிடையாது. சம்பவ தினம் இரவு ஏழு மணிபோல் மதுபோதையில் வீட்டிற்கு வந்த எனது கணவர் சற்று நேரம் புலம்பிக் கொண்டிருந்தார். பின்னர் நான் கூப்பிட்டு சாப்பாடு கொடுத்தேன். அவர் படுத்துவிட்டார் நாங்களும் படுத்துவிட்டோம். இரவு 11 30 மணிபோல் எழும்பிப் பார்த்தபோது வீட்டு முகட்டில் எனது சேலையில் அவர் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு குளறினேன். அயலவர்கள் ஓடி வந்து தொங்கிக் கொண்டிருந்தவரை சேலையிலிருந்து மீட்டு கீழே கிடத்தினர். ஆனல் அவர் இறந்துவிட்டார்.

இதனையடுத்து மரண விசாரணை செய்த பருத்தித்துறை பதில் நீதவான் திரு. கே. கே. பாலசுப்பிரமணியம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்

## மொழிவழித் தொழிற் சங்க கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச மொழிவழித் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளின் மாதாந்தக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை தமிழ் தொழிற் சங்கக் கூட்டணியின் ஸ்ரான்லி வீதியிலுள்ள செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"தமிழ் மொழி அமுலும் மொழிவழித் தொழிற் சங்கமும்" என்னும் விடயம் பற்றி ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் உரையாற்றுவார். (கொ)

(உடுப்பிட்டி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 18 வயது முடிவடைந்தும் ஆள் பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்படும் அடையாள அட்டைக்கு இம்மாதம் 10-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பித்துக்கொள்ளுமாறு கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. எம். தம்பிமுத்து அறிவித்துள்ளார்.

ஈழநாடு பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்கு வீதி63-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office Sri Lanka under No. GE/8948/78 The Eelanaadu, Post Box No. 49, Telegram: 'Eelanaadu' Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org